89

ஆங்கிலக் கவிதை மலர்கள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 APR 1943
MADRAS

பெ. திரிகூடசுந்தரம்,
எம்.ஏ., பி.எல்.

ஆங்கிலக்
கவிதை மலர்கள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 APR 1943
MADRAS

17157

821

பொ. திரிகூட சுந்தரம்

அழகிய ஜாக்கெட்டுடன்

ரூ. 1 - 0 - 0

ரெக்ஸைன் பரிசுப் பதிப்பு

ரூ. 1 - 8 - 0

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 APR 1943
MADRAS

முன்னுரை

உணர்ச்சி வேகத்தால் உந்தப்பட்டு உள்ளத்தில் ஓடிக் குவியும் எண்ணங்களுக்கு நிலைபெற்ற தன்மை கொடுப்பது கவிதை. கவிஞன் உணர்ச்சிப் பெருக்கில், தான் உள்ளூற அநுபவிக்கும் ஒரு விஷயத்தை அப்படியே மனத்தில் பதிய வைத்துக்கொள்கிறான். அப்படி, தான் உணர்ச்சி பொங்க அநுபவித்ததை இம்மிகூடக் குறையாமல் பிறரும் அநுபவிக்குமாறு செய்ய விரும்புகிறான். அப்படிச் செய்வதற்கு அவனுக்குள்ள ஒரே சாதனம் சொற்களே. அதனால் அந்தச் சொற்களை எந்த விதத்தில் அமைத்தால் தன்னுடைய எண்ணம் நிறைவேறுமோ, அந்த விதத்தில் அந்தச் சொற்களை அமைக்கிறான். அப்படிச் சொற்களை உணர்ச்சி எழுப்பும் வண்ணம் அமைப்பதற்காக எதுகை, மோனை, சீர், தளை எனச் சில யாப்பு முறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு சொற்களைத் தேர்ந்தெடுத்துத் தக்க முறையில் அமைப்பதைத்தான் பாட்டு என்று கூறுகிறோம்.

ஆகவே, பாட்டின் உயிர் அதில் அடங்கியுள்ள விஷயம் அல்லது கருத்து. அதன் உடல், தக்க முறையில் அமையும் சொற்களின் கோவை. சொல்லும் கருத்தும் பொருத்தமாக அமைந்துவிட்டால், 'செஞ்சொற் கவியின்பம்' தோன்றிவிடும். அப்பொழுது கவிஞன் உள்ளமும் வாசகன் உள்ளமும் சந்தித்து லயித்துவிடுகின்றன. அத்தகைய பாட்டையே ஜனங்கள், 'நல்ல கவி, நல்ல கவி' என்று

பாராட்டிப் போற்றி அடிக்கடி பாடி அநுபவிக்கிறார்கள். இதுதான் எல்லாப் பாஷைகளுக்கும் பொதுவான கவி லட்சணம்.

ஆனால், ஒவ்வொரு நாட்டின் கவிதையும் அந்தந்த நாட்டின் பேச்சமைதியையே பின்பற்றி ஒழுகும். அதனால் ஒரு பாஷையிலுள்ள கவிதையின் சுவையை அந்தப் பாஷைக்கு உரியவர்கள்தாம் பூரணமாக அநுபவிக்க முடியும்; மற்றவர்களால் முடியாது. அப்படி ஒருவன் பிற பாஷைக் கவிதையை அநுபவிப்பதே அசாத்தியமானால், அதைத் தன்னுடைய பாஷையில் பெயர்த்துக்கொள்வது எவ்வளவு சிரம சாத்தியமான காரியம்!

ஆயினும், பிற நாட்டுப் பாடல்களை, அவற்றின் மூலாதாரமான உயிர்ப்போக்கை மட்டும் வைத்துக்கொண்டு, எதுகை மோனை அழுத்தங்களைக் குறைத்துச் சிறிது கலசலாக அமைப்பதானால், ஓரளவு வெற்றி பெற முடியும். அம்மாதிரியான ஒரு முயற்சியில், குறிப்பிடத் தகுந்த முதலாவது மைல்-கல் இந்த 'ஆங்கிலக் கவிதை மலர்கள்' தமிழுக்கு வெளியில் தெரிந்துகொள்ள வேண்டியது ஒன்றும் இல்லை என்று உள்ளத்தை மூடிக்கொள்ளுபவர்களும், அயல் விஷயங்கள் தமக்குப் புரியா என்று வெருண்டு ஓடுபவர்களும் இந்த முயற்சியைப்பற்றி என்ன நினைத்தாலும், மற்றவர்கள் எல்லோரும் வரவேற்கவே செய்வார்கள்.

இங்கே தரப்படும் பாடல்கள், எதுகை மோனை என்ற சாதனங்கள் நீக்கப்பட்டு, பேச்சுக்குரிய அழுத்த பாவங்களுடன் பெயர்க்கப்பட்டிருக்கின்றன. மூலத்தின் கருத்துக்களையும், மூலம் அளிக்கும் இன்பத்தையும் இம்மொழி பெயர்ப்பின் வழியாகப் பெற முடிகின்றது.

வயிற்றுப் பசியால் கண்களும், மனமும், செயலும் குழம்பும் ஓர் ஏழைத் தையல்காரியின் மனச் சுழலே வர்ணிக்கும் இந்த வரிகளைப் பார்ப்போம்:

தலே சுழலும் - ஆயினும் என்ன?
வேலே - வேலே - வேலே!
கண்கள் மயங்கும் - ஆயினும் என்ன?
வேலே - வேலே - வேலே!
கைகள் - கழுத்து - காசா - தையல்!
காசா - கழுத்து - கைகள் - தையல்!

இதைவிட அழுத்தமாக எப்படிச் சொல்ல முடியும்? இந்தத் தையல்காரி வெள்ளைக்காரிதான் - ஏழை. நம்மைப் போல் அவளுக்கும் பசி உண்டு; உழைப்புக்கு ஏற்ற கூலி கிடைக்காத ஏமாற்றம் உண்டு. இதுதான் 'ஷர்ட்டின் பாடல்'. திரிகூடசுந்தரம் இத்தகைய பலவித உணர்ச்சிகளை ரச-பேதம் ஏற்படாமல் தந்திருக்கிறார்.

'ஆங்கிலக் கவிதை மலர்கள்' வெளித் தோட்டத்திலிருந்து பறித்துக் கொண்டுவரப்பட்ட மலர்கள். ஆயினும், இவை நமக்கும் நறுமணம் தரும் உருவத்தில் வந்துவிட்டன. வாசகர்கள் மாலேயை விரும்பி அணிந்து மகிழ்வதில் தான் மலர்கள் கொய்ததற்கும் தொடுத்ததற்கும் உரிய பலன் காணப்படும்.

பதிப்பாசிரியர்

பொருளடக்கம்

பாகம் I

1.	ஒளி போர்டில்லன்	பக்கம்	1
2.	குழந்தை மகாராஜா லாரன்ஸ் ஆல்மா டாடிமா		2
3.	குழந்தைகள் லாங்பெலோ		3
4.	அலாடின் விளக்கு ஜே. ஆர். லவல்		5
5.	குழந்தைகள் காண்பது என்ன ? லாரன்ஸ் ஆல்மா டாடிமா		6
6.	இன்றும் அன்றும் ஹூட்		7
7.	நமது குழந்தை மதயாஸ் பார்		9
8.	தாயின் சோகம் ஜோஸப் ஸ்கிப்வீ		10
9.	நள்ளிரவில் லூயி மாரிஸ்		11
10.	இனி உயிர் ஏன் ? டெனிஸன்		13
11.	அப்பா வருகிறார் ! சார்லஸ் மாக்கே		14
12.	அன்னை வால்ட் விட்மன்		16

பாகம் II

13.	காதல் ராபர்ட் பர்ன்ஸ்	21
14.	ஜென்னி முத்தம் தந்தாள் ! லே ஹண்ட்	22
15.	என் காதலி ரோஜா மலரானால் —	23
16.	வாழ்ந்துவிட்டேன்! டெனிஸன்	24

17. காதலும் மணமும் பக்கம் 25
லின்ட்ஸே சீமாட்டி
18. மாலுமியின் மனைவி 28
மிக்கிள்

பாகம் III

19. கவிஞனும் கவிகளும் 33
லாங்பெலோ
20. பாடகர்கள் 34
லாங்பெலோ
21. கவியும் காலமும் 36
ஷேக்ஸ்பீயர்
22. எட்டாத லட்சியம் 37
பிரடரிக் லாக்கர்
23. நண்பர் கூடும் கரை 38
24. மலையின் மேல் 39
ராஸெட்டி
25. ரோஜாவும் முள்ளும் 40
லான்டார்
26. புகழ் 41
கீட்ஸ்
27. வாடிய ரோஜா 42
பிரௌணிங் தேவி
28. சுதந்திரம் 44
ஷெல்லி
29. என் தோணி கரையிலே 45
பைரன் பிரபு
30. மண்ணும் விண்ணும் 46
கோரி
31. நமக்கு அழகான இடம் வேறில்லை 48
ஜான் லட்விக் ரூனிபெக்
32. அதிர்ஷ்டம் எப்பொழுது ? 49
ஜேம்ஸ் தாம்ஸன்
33. தனி மலர் 50
மூர்

34. இரு நண்பர்கள் பக்கம் 51
பார்பால்ட்
35. என் தாய்நாடு 52
நாராயண வாமன திலகர்
36. இன்னும் ஒரு துரதிர்ஷ்டசாலி 54
ஹூட்

பாகம் IV

37. ஷர்ட்டின் பாடல் 61
ஹூட்
38. குழந்தைகளின் அழுகுரல் 66
பிரௌணிங் தேவி
39. நீங்கள் பலர் - அவர்களோ சிலர்! 72
ஷெல்லி
40. ஆங்கிலர்க்கு ஒரு கீதம் 73
ஷெல்லி
41. எழுந்திடுக! 76
இக்பால்
42. இறந்தோர் நகை 77
ஹரீந்திரநாத சட்டோபாத்யாயர்

பாகம் V

43. கலைஞன் 81
ஆஸ்கார் ஒயில்ட்
44. தேவ நீதி மன்றம் 82
ஆஸ்கார் ஒயில்ட்
45. 'நன்மை செய்தால்—' 85
ஆஸ்கார் ஒயில்ட்
46. உனக்கு அது போதும்! 87
எட்வார்டு கார்ப்பென்டர்
47. காதல் 88
எட்வார்டு கார்ப்பென்டர்
48. சமத்துவ தர்மம் 91
எட்வார்டு கார்ப்பென்டர்
49. நீ யார்? 93
எட்வார்டு கார்ப்பென்டர்

கவிவாணரைப் பற்றிய குறிப்புகள்

ஆஸ்கர் ஒயில்ட் (1856–1900)

ஐரிஷ்காரர். டப்ளின் நகரத்து டிரினிடி கலாசாலையிலும், ஆக்ஸ்போர்டு மாக்டலின் கலாசாலையிலும் கல்வி பயின்றவர். 1895-ம் ஆண்டு அவர் சிறைவாசம் செய்ய நேர்ந்தது. சிறையிலேயே அவர் அநேக நூல்களை இயற்றியுள்ளார்.

இக்பால் (1873 — 1938)

இந்தியாவின் வட மாகாணமாகிய பஞ்சாபில் பிறந்தவர்; எம். ஏ. பட்டம் பெற்றவர்; வக்கீல் தொழில் நடத்தினார். உர்தூவிலும் பாரசீக பாஷையிலும் பெரிய கவிஞர். 'இஸ்லாத்தின் கவிஞர்' என்று புகழ் பெற்றவர். அழகான தேசீய கீதங்கள் பாடியுள்ளார்.

எட்வர்டு கார்ப்பெண்டர் (1844–1929)

இங்கிலாந்தின் தவப் புதல்வர்களில் ஒருவர்; மகா ஞானி; சமதர்ம உணர்ச்சி மிக்கவர். 'சிருஷ்டியின் கலை', 'நாகரிக நோயின் காரணமும் பரிகாரமும்', 'ஜனநாயக லட்சியம்' முதலிய பல நூல்களை இவர் எழுதியிருக்கிறார்.

கீட்ஸ் (1795 — 1821)

ஆங்கில மகா கவிகளில் ஒருவர். சாதாரணக் கல்வி பெற்று மருந்து ஷாப்பில் வேலை பார்த்தவர். 21-வது வயதில் அந்த வேலையை விட்டு விலகிப் பாடல்கள் இயற்றினார். ஆரோக்கியம் பெற ஐரோப்பா சென்ற இடத்தில் 26-வது வயதில் அகால மரணம் அடைந்தார். கவியுலகில் உன்னத ஸ்தானம் அடைந்துள்ளவர். அறிஞர்கள், 'கவிஞரின் கவிஞர்' என்று இவரைப் புகழ்கின்றனர்.

ஹரீந்திரநாத சட்டோபாத்யாயர் — (பிறப்பு 1896)

ஜீவந்தராயுள்ள இந்தியக் கவிவாணர். தீவிர அபேதவாதி. முன்னால் பழைய பாணியைப் பின்பற்றி அநேகம் பாடல்கள் இயற்றியிருக்கிறார். ஆனால், சமீப காலத்தில் இவர் பாடும் பாடல்கள் நெருப்பைக் கக்கிக்கொண்டு வருகின்றன. அவ்வளவு உணர்ச்சி நிறைந்திருக்கும்.

ஹூட் (1799 — 1845)

ஆங்கிலக் கவிஞர். அனைவரும் போற்றும் ஹாஸ்ய மணி. இலக்கிய உலகில் இளகிய மனதுடையோரில் ஒருவர். இவருடைய 'ஷர்ட்டின் பாடல்' அதற்குத் தக்க சான்று.

கோரி (1823 — 1892)

ஆங்கில ஆசிரியர்.

சார்லஸ் மாக்கே (1814 — 1889)

ஸ்காட்லந்து தேசத்துக் கவிஞர். உற்சாகம் அளிக்கும் பாடல்களைப் பாடுவதில் கீர்த்தி பெற்றவர். 'அப்பா வருகிறார்!' என்பதில் காதல் அமுதை நிறைத்து வைத்திருக்கிறார்.

ஜான் லட்விக் றுனிபெக் (1804 — 1877)

பின்லந்து தேசத்தில் பிறந்தவர். ஸ்வீடிஷ் பாஷையின் பிரதான கவிஞரில் ஒருவர். இவருடைய கவிகள் பின்லந்து, ஸ்வீடன் ஆகிய இரண்டு தேசங்களையும் ஒன்றாய் இணைக்க முயன்றன.

ஷெல்லி (1792 — 1822)

ஆங்கில மகா கவிகளில் ஒருவர். அதி அற்புதமான பாடல்களைச் செய்தவர். சுதந்திரத்தில் அளவிலாத் தாகங் கொண்டவர். ஒரு சமயம் கடலில் உல்லாசமாய்த் தோணியில் போய்க்கொண்டே கீட்ஸ் என்னும் கவிஞரின் பாடப் புத்தகத்தைப் படித்துக்கொண் டிருக்கும்போது, புயல் வந்து, தோணி கவிழ்ந்து உயிர் துறந்தார்.

ஷேக்ஸ்பீயர் (1564 — 1616)

ஆங்கில நாட்டில் பிறந்து உலக மகா கவி என்னும் புகழ் பெற்றவர். அற்புதமான நாடகங்களும் கவிகளும் அருளியவர். மற்ற எல்லா நூல்களும் அழிந்தாலும் அவருடைய நூல்களைக் கொண்டு ஆங்கில மொழி அழியாது நிலவும் என்று அறிஞர் போற்றும் பெருமையுடையவர். 'ஸானட்' என்னும் வகையைச் சேர்ந்த அழகு ததும்பும் கவிகளில் ஒன்று 'கவியும் காலமும்' என்பது.

டெனிஸன் (1809 — 1892)

ஆங்கில மகா கவிகள் ஷேக்ஸ்பீயர், மில்டன், வோர்ட்ஸ்வொர்த் இவர்களோடு எண்ணப்படுபவர். கவிதைக்காகவே உயிர் வாழ்ந்தவர். இங்கிலாந்து மன்னரின் சமஸ்தான கவிஞராயும், சென்ற நூற்றுண்டின் ஆங்கிலக் கவிச்சக்கரவர்த்தியாயும் இருந்தார்.

தாம்ஸன் (1834 — 1882)

ஸ்காட்லந்து தேசத்துக் கவிஞர். அழகான பல கீதங்கள் எழுதியிருக்கிருர். முழுப் பெயர் ஜேம்ஸ் தாம்ஸன்.

நாராயண வாமன திலகர்

இந்திய மகாராஷ்டிர தேசத்தினர்; கிறிஸ்தவர்; பல அழகான ஆங்கிலக் கவிகள் செய்துள்ளார்.

பார்பால்ட் (1743 — 1825)

இவ்வம்மையார் புகழ்பெற்ற ஓர் ஆங்கிலக் கவிஞர்.

பிரடரிக் லாக்கர் (1821 — 1895)

ஓர் ஆங்கிலக் கவிஞர்.

பிரௌணிங் தேவி (1806 — 1861)

ஆங்கிலக் கவிஞர். சிறு பிராயம் முதல் நோயாளி. அவர் செய்த அநேக அழகான கவிகளில் ஒன்றைப் பார்த்ததும் பிரௌணிங் என்னும் கவிஞர்க்குக் காதல் பிறந்து மணம்

நிகழ்ந்தது. 'குழந்தைகளின் அழுகை' என்னும் பாடல், ஷாப்ட்ஸ்பரி பிரபு குழந்தைகளின் கஷ்டங்களை நீக்கும் பொருட்டுச் செய்த முயற்சிக்குப் பெருந்துணையாய் இருந்தது. ஆங்கிலப் பெண் கவிஞரில் இவ்வம்மையார் தலைசிறந்தவர்.

பைரன் பிரபு (1788 — 1824)

ஆங்கில மகா கவிகளில் ஒருவர். சிறு வயதிலேயே பாடல்கள் பாடியவர். 24-வது வயதில் பெருங் கவிஞர் என்று புகழ் பெற்றார். தவறான நடையால் ஜனங்களின் அன்பை இழந்து ஐரோப்பா சென்று வாழ்ந்து வந்தார். அப்படிப் போகும் பொழுது தாமஸ் மூர் என்னும் தம் நண்பருக்கு அனுப்பியதே 'என் தோணி கரையிலே' என்னும் கீதம். கிரீஸ் தேசத்தின் சுதந்திரத்துக்காகத் துருக்கியோடு நிகழ்ந்த போரில் கலந்து கொண்டு, 36-வது வயதில் வீரசொர்க்கம் அடைந்தார்.

போர்டில்லன் (1852 — 1921)

ஓர் ஆங்கிலக் கவிஞர்.

மதயாஸ் பார்

ஜெர்மானியர். ஸ்காட்லந்தில் பிறந்தவர். ஆங்கிலத்தில் குழந்தைகளுக்காக அநேக அழகான பாடல்கள் பாடியவர்.

மிக்கிள் (1735 — 1788)

ஸ்காட்லந்து தேசத்துக் கவிஞர். உலக மகா கவிகளில் ஒருவரான போர்த்துகீஸிய கவியரசர் காமியன்ஸ் என்பவர் எழுதிய 'லூஸியட்' என்னும் காவியத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். ஸ்காட்லந்து தேசத்துக் கவிஞர்களில் தலைசிறந்த பர்ன்ஸ் என்பவர், 'மிக்கிள் செய்த "மாலுமியின் மனைவி" என்னும் பாடல் எல்லாப் பாஷைகளிலும் இணையற்ற பாடல்கள் என்பவற்றுள் ஒன்று' என்று புகழ்ந்துள்ளார்.

மூர் (1779 — 1852)

அயர்லாந்து தேசத்தினர். இசையில் வல்லவர். இவர் இயற்றிய கீதங்களில் 'தனி மலர்' பெயர்பெற்றது. ஒரு சமயம் பைரன் என்னும் கவிஞரோடு ஆற்றங்கரை யோரத்தில் பேசிக் கொண்டிருந்தார். புகழ் எது என்பதைப் பற்றிய பேச்சு எழுந்தது. அப்பொழுது படகு ஒன்றில் பலர் மூரின் கீதங் களைப் பாடிக்கொண்டு போனார்கள். அதைக் கேட்டதும் பைரன் குதித்தெழுந்து, 'ஆஹா! அதுதான் புகழ்!' என்று மூரின் தோளில் கையை வைத்துக் கூறினர். அவ்விதம் அவருடைய கீதங்கள் அனைவராலும் போற்றப் பெற்றன.

ராஸெட்டி (1830 — 1894)

முழுப் பெயர் கிறிஸ்டினு ராஸெட்டி. சென்ற நூற்றாண் டில் ஆங்கில நாட்டில் திகழ்ந்த பெண் கவிஞர்களில் ஒருவர். பக்தி ரசம் மிகுந்த பாடல்கள் செய்துள்ளார்.

ராபர்ட் பர்ன்ஸ் (1759 — 1796)

ஸ்காட்லந்து தேசத்து மகாகவி. கீதங்கள் இயற்று வதில் உலகக் கீர்த்தி பெற்றவர். பாமர மக்களும் பரவசமாகும் வண்ணம் செய்தவர். சாதாரண விவசாயியாக இருந்தார். காதலைப் பற்றி இவரைவிட அதிக அழகாயும் உணர்ச்சியாயும் பாடியவர் கிடையார் என்று அறிஞர் போற்றுகின்றனர்.

ஜே. ஆர். லவல் (1819 — 1891)

அமெரிக்கக் கவிஞரும் கட்டுரையாளருமான இவரு டைய சுதந்திர கீதங்கள் கீர்த்தி பெற்றவை. இலக்கிய விமரிசனத்தில் பெரும் புகழ் கொண்டவர். ஸ்பெயினிலும் இங்கிலாந்திலும் அமெரிக்க ஸ்தானிகராக இருந்தார்.

லாங்பெலோ (1807 — 1882)

அமெரிக்க மகா கவிகளில் ஒருவர். இலக்கியத்துக் காகவே வாழ்ந்தவர். ஏராளமான கவிகள் செய்துள்ளார். அவை ஊக்கமும் உற்சாகமும் அளிப்பவை.

லான்டார் (1775 — 1864)

ஆங்கில ஆசிரியரும் கவிஞருமான இவர் கிரீக், லத்தீன் நடையைத் தழுவி எழுதியவர். தத்துவ உண்மைகளைச் சித்திரிப்பதில் சமர்த்தர்.

லாரன்ஸ் ஆல்மா டாடிமா

ஆங்கில நாவலாசிரியரும் கவிஞருமான இவர், கிரீஸ் தேசத்தின் மகிமையைக் காட்டும் சித்திரங்கள் வரைந்து புகழ்பெற்ற ஸர் லாரன்ஸ் ஆல்மா டாடிமாவின் குமாரி. குழந்தைகளுக்கான பாடல்கள் அநேகம் அழகாகப் பாடியுள்ளார்.

லின்ட்ஸே சீமாட்டி (1750 — 1825)

ஸ்காட்லந்து தேசத்தினர். இவருடைய ‘காதலும் மணமும்’ பல ஆசிரியர்களாலும் போற்றப்படும் கீதம்.

லூயி மாரிஸ் (1832 — 1907)

வேல்ஸ் தேசத்துக் கவிஞர். டெனிஸன் என்னும் ஆங்கில மகாகவியைப் பின்பற்றி எழுதியவர். ஸயன்ஸிலும் கவிதை காண முயன்றவர். தொழிலாளர் துன்பங்கள் குறித்து ‘இறந்தோர் உலகம்’ என்னும் காவியத்தில் பாடுகின்றார்.

லே ஹண்ட் (1784 — 1859)

ஆங்கிலக் கவிஞரும் கட்டுரையாளருமான இவர் பத்திரிகைத் தொழில் நடத்தியவர். அரசனைக் கண்டித்ததற்காகச் சிறைவாசம் பெற்றவர். கீட்ஸ், ஷெல்லி, பைரன் போன்ற கவி சிரேஷ்டர்களின் நண்பர். எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் எப்பொழுதும் உற்சாகமாய் இருப்பார். ‘ஜென்னி முத்தம் தந்தாள்’ என்னும் பாடல் இதற்குச் சான்று பகரும்.

வால்ட் விட்மன் (1819 — 1892)

அமெரிக்க மகா கவிகளில் ஒருவர். அமெரிக்க ஜனநாயகக் கவிஞர் என்றும் கூறுவர். ஆங்கில யாப்பிலக்கணத்தை விட்டு அவராகப் புதியதோர் கவிநடையை வகுத்துக்கொண்டார். அதன் மூலம் சோகம் உற்சாகம் ஆகிய இரண்டு உணர்ச்சிகளையும் எழுப்புவதில் சமர்த்தர்.

ஆங்கிலக் கவிகள்



ஷேக்ஸ்பியர்



டெனிஸன்



ராபர்ட் பிரௌணிங்



பிரௌணிங் தேவி

ஆங்கிலக் கவிகள்

ஷெல்லி

கீட்ஸ்



பைரன் பிரபு

ராபர்ட் பர்ன்ஸ்

ஒளி

I

இரவுக்கு ஆயிரம் கண்கள்,
ஆனால் பகலுக்கு ஒன்றே!
ஆயினும் சூரியன் மறைந்தால்,
உலகத்தில் ஒளி இல்லையே!

II

அறிவுக்கு ஆயிரம் கண்கள்,
ஆனால் நெஞ்சுக்கு ஒன்றே!
ஆயினும் அன்பு மறைந்தால்,
வாழ்வில் ஒளி இல்லையே!

போர்டில்லன்

குழந்தை மகாராஜா

I

குழந்தை மகாராஜா
அரியாசனத் தமர்ந்து,
தனிக் குடைக் கீழ்
அரசு செய்கிருர் !

II

அவர் அரியாசனம் எது ?
அன்னையின் மெல்லிய மடி:
அவர் தவிர யாரும்
அதில் அமர முடியாது.

III

அவர் அரசு எது ?
அன்னையின் இதய கமலம்.
அது முழுதும் அவருக்கே சொந்தம்,
அங்கே அரச பக்தி ததும்பும்.

IV

அவர் சட்டங்கள் அனைத்தும்
தெய்விக மானவை,
அவ்வளவு சுலபமானவை,
அன்பு மய மானவை.

லாரன்ஸ் ஆல்மா டாடிமா

குழந்தைகள்

I

குழந்தைகளே! என்னிடம் வாருங்கள் !
உங்கள் விளையாட்டைப் பார்க்கப் பார்க்க,
என்னைக் கலக்கிய சங்கைகள் எல்லாம்
மாயமாய் மறைந்து விடுகின்றன !

II

ஞாயிறு நோக்கும் சாளரம் திறமின் !
தூக்கணங்கள் பாடும், ஓடைகள் ஒளிரும்.

III

பானுவும் பட்சிகளும் உங்கள் இதயத்திலே !
ஓடையின் நீரோட்டம் உங்கள் கருத்திலே !
என் இதயத்திலோ, இலையுதிர் காற்று -
பனியும் விழ ஆரம்பம் !

IV

குழந்தைகள் மட்டும் இல்லாவிடில்,
உலகத்தால் நமக்கு என்ன பயன் ?
முன்னுள்ள இருளினும் பின்னுள்ள பாலையை
அதிகமாக அஞ்சுவோம்.

V

இனிய மென் சாறு,
ஒளியும் காற்றும் பருகி
மரமாய் இறுகும்.

அடி மரத்துக்குக் கிடையாத
ஒளியும் காற்றும்
இலைகளால் கிடைக்கும்.
அரணியத்துக்கு இலைகள் - அவைபோல்
அவனிக்குக் குழந்தைகள்!

VI

குழந்தைகளே! என்னிடம் வாருங்கள்!
உங்கள் ஒளியுலகில் உலவும்
பட்சியும் காற்றும் பாடுவதை
என் செவியில் கூறுங்கள்!

VII

உங்கள் மெய் தீண்டும் இன்பம்,
உங்கள் பார்வையின் ஆனந்தம்,
இவை எங்கே?
எங்கள் நூல்களின் ஞானம்,
எங்கள் அறிவின் சூழ்ச்சிகள்,
இவை எங்கே?

VIII

உங்களைவிட உயர்ந்த பாடல்கள்
ஒரு காலத்தும் பாடப் பட்டதில்லை.
நீங்கள் உயிருள்ள பாடல்கள்,
ஏனைய எல்லாம் இறந்தவையே!

லாங்பெலோ

அலாடின் விளக்கு

I

நான் சிறுவனு யிருந்தபொழுது பரம ஏழை,
பிச்சை எடுத்தே வயிறு வளர்த்தேன்.
அதனுல், எனக்கு நண்பர் எவர்?
எனக்கு விளையாட்டுப் பொருள் ஏது?
என்னிடம் இருந்த தெல்லாம்
அலாடின் விளக்கு ஒன்றே!

II

குளிர் மிகுதி — தாங்க முடியாது.
அப்பொழுது நான் என் கற்பனை
விளக்கேற்றுவேன்.
கண்கவரும் கனக மாளிகைகள்
கட்டிக்கொண்டே யிருப்பேன்.
இரவும் கழியும், பனியும் ஒழியும்.

III

இரவு பகலாய் உழைத்தேன்,
ஏகமாய்ச் செல்வம் குவித்தேன்,
எத்தனையோ வெள்ளி விளக்குகள் சேர்த்தேன்.
ஆனுல், என் பழைய அலாடின் விளக்கை
யார் தருவார்?
அதிர்ஷ்டமே! நீ அளித்த செல்வம்
எதுவாயினும் எடுத்துக்கொள்!
எதை இழக்கவும் வருந்தேன்,
என் கனக மாளிகைகள்தாம் இல்லையே!
மற்றவை எனக்கு எதற்கு?

ஜே. ஆர். லவல்

குழந்தைகள் காண்பது என்ன ?

I

நாம் சிறு குழந்தைகள்தான் !
ஆனால் குழந்தைகளா யிருப்பதில்,
எத்தனை கோடி யின்பம் !
பெரியவர்கள் காணவே முடியாத
ஆயிர விசித்திரம் காண்போம் !

II

அதோ ஒரு பாறை -
அதன் மேல் பாசி -
அவற்றைப் பெரியோர் பார்ப்பதுண்டோ ?
அவர்கள் புல்லில் படுத்து
விளையாடுவ துண்டோ ?

III

கடற்கரைக்குப் போனால்,
நம் அப்பாவுந்தான் வருகிறார் -
ஆனால், நம்மைப் போல் அவர்
விசித்திரப் பொருள்கள் காண்பதுண்டோ ?

லாரன்ஸ் ஆல்மா டாடிமா

இன்றும் அன்றும்

I

ஐயோ ! நான் சிறுவனாய் இருந்த பொழுது
இரவும் பகலும் ஆனந்தம் நிறைந்திருந்தது.
என் தோழர் மகிழ்ந்து அன்பு செய்தனர்.
அந்தக் காலத்தைத் திரும்பிப் பார்த்தால்,
பெருமூச்சு எழுவதும், கண்ணீர் கசிவதும்
வியப்பில்லை.

II

இரும்பு வளையம் சுற்றுவேன்:
இன்பத்துக்கு மேல் இன்பம் தரும் !
பம்பரம் - எத்துணை இன்பப் பொருள் !
ஆனால், இன்று அந்த இன்பங்கள் எங்கே ?
ஐயோ, இப்பொழுது என் தலையே பம்பரம் -
என் கவலைகளே அதன் கயிறு !

III

என் இன்பங்கள் சிறகை இழந்தன.
நான் பறக்க இயலுமோ ? - விழுவேன் !
அச்சம் ஓங்கும், கனவு கலையும்.
முன்னால், இன்பம் அழைக்குமுன் வருமே !
இன்று அழைத்தால் இரும்பு வளையம்
'ஏன் !' என்று கேட்குமோ ?

IV

என் கால்-பந்து இப்பொழுது அலமாரியில் ;
இப்பொழுது நானேதான் பந்து ;
உலகம் இங்கு மங்கும் உதைக்கும் !
அம்பு எய்வேனோ ? அதையும் மறந்தேன்.
என் அம்பையும் வில்லையும் எல்லாம்,
துக்கம் என்மீதே திருப்பிவிடும் !

V

வானத்தில் அன்று கண்ட நீலமும்
சாந்தியும் இன்று உண்டோ ?
விளையாடும் பூமியில் வளர்ந்த மரம் -
அதைப் போர்த்த இலைகள் -
அந்தப் பசுமை இப்பொழுது உண்டோ ?
நான் நேசித்தவை எல்லாம் மாறிவிட்டன !
அப்படியில்லை, மாறுதல் என்னிடம்தான்:
இனி என் மனம் சாந்தி அடையுமோ ?

ஹாட்

நமது குழந்தை

I

விண்ணின்று வந்த பாப்பா.
நகை முகம், கதிர்வீசுங் கண்கள்,
கோவை இதழ்கள், கிளி மூக்கு,
மெல்லிய சுருள், பொன்னவிர் தலை,
உரத்த குரல், மழலை நா.

II

இன்னும் எண்ணங்கள் எழவில்லை,
இன்னும் கவலைகள் உதிக்கவில்லை,
போற்றக் கிடைத்த புது மலர் -
அன்பு செய்யப்பெற்ற ஆன்மா.

III

ஒரு பொழுதும் சும்மா இராத பாப்பா,
நமது சின்னஞ் சிறு பாப்பா,
அரும்பெறல் அமிழ்தம் பாப்பா,
ஆண்டவனே அதை அறிவார்.

மதயாஸ் பார்

தாயின் சோகம்

I

தாய் அழுதாள், தந்தை பெருமூச்சு விட்டான்,
பையனே - மகிழ்ச்சி ததும்பி,
'நாளை நிலக்கரிக் கனிக்குச் செல்வேன்!' என்றான்.

II

வீட்டில் தங்கான் - வெளியே போனான்,
வாலிபர் வயோதிகர் எல்லோர்க்கும் சொன்னான்.
செய்தியை ஊர் முழுவதும் பரப்பினான்,
ஆனந்தத்தில் ஆடினான், பாடினான்!

III

அவனுடைய நண்பர்கள் வந்தனர்.
சிலர் ஆச்சரியம் போர்த்து நின்றனர்,
சிலர் யோசனை கூறினர், சிலர் புகழ்ந்தனர்,
சிலர் பொறுமையால் ஸ்தம்பித்து விட்டனர்.

IV

'அபாயம் வராமல் ஆண்டவன் காக்க!'
என்று பாட்டிமார் வாழ்த்தினர்.
தந்தை கையால் முகத்தை மறைத்துப்
பெருமூச்சு விட்டான் ;
தாய் மறுபுறம் திரும்பி அழுது நின்றாள்.

ஜோஸப் ஸ்கிப்ஸி

நள்ளிரவில்

I

இரண்டு எளிய சிறுமிகள் -
இன்னும் குழந்தைகளே அவர்கள்
நள்ளிரவில் - நடு வீதிகளில்
பாடித் திரிந்தனர்.

II

கந்தல் உடை - கதிர் வீசும் கண்கள் -
நாணப் பார்வை - கோத்த கைகள்
திரண்ட கன்னங்கள் - சாய்த்த தலைகள்
பாடித் திரிந்தனர்.

III

கடவுளே! அவர்கள் பாடித் திரிந்தனர்
தங்கள் மழலைக் குழவிக் குரலில்!
தேவ கீதம் - காதல் கீதம்
பாடித் திரிந்தனர்.

IV

சத்தமே அறியாத சதுக்கத்தில்,
ஆரு மில்லாத நெடுந் தெருவில்,
மாலையில் வீடுவரும் மாணவிகள்போல்
பாடித் திரிந்தனர்.

V

பாடித் திரிந்தனர் - பாடுவதை அறியார்!
அக்கிரமங்கள், அடக்கு முறைகள்,
அவைகளில் பிறந்த அந்தப் பழம் பல்லவியே
பாடித் திரிந்தனர்.

VI

சுயநலமியின் செல்வம், பசியின் கொடுமை,
ஏழையின் தேவையில் பிறந்த இழிசெயல் -
இவற்றை யெல்லாம் அந்தச் சிறுமிகள்
பாடித் திரிந்தனர்.

VII

ஆன்மாவை விலைகொள்ளும் லஞ்சம்,
மறச்செயல், துக்கம், அவற்ருல்
விதைத்த வினையை அறுவடை செய்தலைப்
பாடித் திரிந்தனர்.

VIII

இவ்விதமே மறம் மல்கிய இடங்களில்
பாடித் திரிந்தனர்.
வீழ்ந்தார் இடையில் அவரையும் இழந்தேன் -
பாடித் திரிந்தனர்.

IX

தேவ கீதம் - காதல் கீதம் -
தலைகீழாய் ஓதிய பிரார்த்தனை -
பயங்கரப் பில்லி சூனியம் -
புனித இனிய விடுதலை - பாடித் திரிந்தனர்!

லூயி மாரிஸ்

இனி உயிர் ஏன்?

I

இறந்துபோன அவள் வீரனை இல்லம் சேர்த்தனர்.
ஆனால் அவள் அழவுமில்லை, அயர்ந்து விழவுமில்லை.
அவள் செயலைக் கவனித்த தோழியர் அனைவரும்,
'அழவேணும், இன்றேல் இறப்பாள்!' என்றனர்.

II

மெல்லிய குரலில் அவனைப் புகழ்ந்தனர்;
காதலுக்கேற்ற கணவன் என்றனர்;
உண்மை நண்பன் - உன்னதப் பகைவன் என்றனர்;
ஆயினும் அவள் அசையவுமில்லை, பேசவுமில்லை!

III

தோழி யொருத்தி, ஆரு மறியாமல்,
ஓசையின்றி மெல்ல நடந்துபோய்,
வீரன் முகத்தின் ஆடையை அகற்றினாள்.
ஆயினும் அவள் அசையவுமில்லை, அழவுமில்லை!

IV

தொண்ணூறு வயதுச் செவிலி எழுந்து,
அவள் மடியில் குழந்தையை வைத்தாள் -
கோடை மழைபோல் கண்ணீர் பெருகிற்று,
'என் இன்பமே, இனி உன்பொருட்டே உயிர்!'
என்றனள்.

டெனிஸன்

அப்பா வருகிறார் !

I

குழந்தாய் ! என் குழந்தாய் !
இதோ உன் தந்தையின் கடிதம்,
என் குழந்தாய் !
எத்தனை முறை படித்தாலும் இன்பம் !
உன்னைப் பார்க்கவும், என்னைப் பார்க்கவும்
கப்பலில் வந்துகொண் டிருக்கிறார் !
என் குழந்தாய் !

II

குழந்தாய் ! என் குழந்தாய் !
அவர் போய் எத்தனை நாட்கள் !
என் குழந்தாய் !
உள்ளத்தின் உண்மையும் உரமும்
துரதிர்ஷ்டம் எதையும் வென்றுவிடும்.
இப்பொழுது துக்கம் - இனியோ ஆனந்தம்,
என் குழந்தாய் !

III

குழந்தாய் ! என் குழந்தாய் !
அவர் திருமுகம் காண ஆவல்,
என் குழந்தாய் !
அது வசந்த கால மல்லிகை !
மேகத்தில் தோன்றும் விண்மீன் !
வீடு நிறைந்த வெளிச்சம் !

முன்போல் என்பால் இருக்க ஆசை,
என் குழந்தாய்!

IV

குழந்தாய்! என் குழந்தாய்!
அவரைக் கண்டு ஆனந்திப்பாய்.
என் குழந்தாய்!
அச்சம் அறியாத கண்கள்
அவரையே நாடச் செய்யும்!
அன்பு ததும்பும் பார்வை,
நிறைந்த குரல் - தெளிந்த நகை,
இவற்றால் நீ அறிந்து கொள்வாய்,
என் குழந்தாய்!

V

குழந்தாய்! என் குழந்தாய்!
அளவிலா ஆனந்தம் - உறங்க முடியவில்லை,
என் குழந்தாய்!
எவ்வளவு இன்பம் - அழுது விடுவேன்!
உன்னைப் பார்க்க - என்னை நோக்கி
கடலில் வந்துகொண் டிருக்கிறார்,
என் குழந்தாய்!

சார்லஸ் மாக்கே

அன்னை

I

அப்பா, வயலிலிருந்து வாரும்,
இதோ நம் பீட்டரின் கடிதம்!
அம்மா, வாசலுக்கு வாரும்,
இதோ உம் அருமை மகன் கடிதம்!

II

அதோ பச்சைப் பசேலென்ற மரங்கள்
குளிர் நிழல் கொடுத்து நிற்கின்றன!
தோப்புகளில் ஆப்பிள்
கனிந்து தொங்குமே!
கொடிகளில் திராட்சைக்
குலைகள் கொஞ்சுமே!
வானில் தெளிவு - மண்ணில் அமைதி,
எங்கும் அழகு - எங்கும் செழுமை!

III

மகள் கூப்பிடத் தந்தை வருகிறார்,
ஆம் தாயும் வாசலுக்கு வருகிறாள்.
விரைந்து வருகிறாள் - மனத்தில் கலக்கம் -
நடையில் பதற்றம் - குழலில் குலைவு!

IV

'கடிதமா? சீக்கிரம் திற - சீக்கிரம் திற!
ஓகோ, இது நம் மகன் எழுதியதா?
ஆனால் - கையொப்பம் அவனுடையதே!
ஓகோ, அவனுக்காக யாரோ எழுதியுள்ளர்!'

V

ஐயோ, அல்லலுறும் அன்னையின் ஆன்மாவே!
அவள் கண்முன் அனைத்தும் சுழல்கின்றன!
முக்கிய மொழிகளே காதில் பாய்கின்றன,
வாசகம் முழுதும் கேட்க ஆற்ருள்.
'குதிரைப் படைச் சண்டை -
குண்டுக் காயம் மார்பில் -
வைத்திய சாலையில் - அசௌக்கியம் -
ஆனல் குணம் விரைவில்!' -
தாயின் முகம் வெளுத்துவிட்டது;
தலையில் மயக்கம், கதவோடு சாய்கிருள்.

VI

'அம்மா! அங்ஙனம் அயராதே!' -
அழுதுகொண்டே மகள் கூவுகிருள்.
சிறு குழந்தைகள் மௌனங் கொண்டு
மதிமயங்கிச் சூழ்ந்து நின்றன.
'அம்மா! இதோ பார்!
பீட்டர் விரைவில் குணமடைவான்
என்று கடிதம் கூறுவதைக் கேள்!'

VII

ஐயோ, ஒருநாளும் அவன் குணமடையான்!
வாசற்படியில் வருந்தி நிற்கும் பொழுதே
அவன் வைத்தியசாலையில் இறந்துவிட்டான்!
ஒரே மகன் - உயிர் துறந்துவிட்டான்!

VIII

ஆனால் இனி அன்னை குணமடைய வேணுமே!
பகலில் உணவு தொடுவதில்லை,
        இரவில் தூங்குவதில்லை,
அல்லும் பகலும் அழுவாள், ஏங்குவாள்!
‘இறைவா! எவரும் அறியா வண்ணம்
வாழ்வி னின்றும் வெளியேறி
என் அருமை மகனைத் தேடி
அவனோடு இருக்க அருள்வாய்!’
என்று கடவுளை இறைஞ்சி உருகுவாள்.

வால்ட் விட்மன்

பாகம் II

காதல்

அழகான டூன் நதி தீரமே!
சூழ்ந்து செறிந்த சோலைகளே!
நானே கவலை நிரம்பி யுள்ளேன்,
நீங்கள் அழகாய் மலர்கின்றீர்!
சின்னப் பறவைகளே! அழகாய்ப் பாடுகின்றீர்!
உங்களுக்கு எப்படி மனம் வந்ததோ?

II

கிளையில் உட்கார்ந்து பாடும் எழில்-பறவையே!
என் இதயத்தை ஏன் வதைக்கிறாய்?
என் பொய்க் 'காதல்' மெய்யாய் இருந்ததே!
அந்தக் காலத்தின் ஆனந்தத்தை
இப்பொழுது நினைப்பூட்டுகிறாய்!
என் இதயத்தை ஏன் வதைக்கிறாய்?

III

காதலன் அருகில் அமர்ந்து பாடும்
அழகான சின்னப் பறவையே!
என் இதயத்தை ஏன் வதைக்கிறாய்?
உன்னைப் போலவே உட்கார்ந்திருந்தேன்,
உன்னைப் போலவே பாடி மகிழ்ந்தேன்,
இந்தப் பீடை வருமென்று அறியேனே!

IV

மரங்கள் பிணைந்து நிற்பதைக் காண
அழகான நதிக் கரையில் அலைந்துளேன்,
ஒவ்வொரு பேடும் தன் காதலனைப் பாடும்,
நானும் என் காதலனைப் பாடுவேன்.

V

சிந்தையில் கவலை நீங்கி இன்புற்று
ரோஜா மலர் ஒன்று பறித்தேன்,
என் மாயக் காதலன் வந்தனன்,
என் மலரைப் பெற்று ஏகினான்;
முள்ளே என்னிடம் எஞ்சி நிற்கும்.

ராபர்ட் பர்ன்ஸ்

ஜென்னி முத்தம் தந்தாள்!

என்னைக் கண்டவுடன்
ஜென்னி ஓடி வந்தாள்,
எனக்கு முத்தம் தந்தாள்.
காலமே! ஏ திருடா!
இன்ப விஷயங்கள் எல்லாம்
சேகரிப்பதில் ஆசையுண்டே,
இதையும் சேர்த்துக்கொள்.

சோர்ந்தான் என்று சொல்லு,
துயருற்றான் என்று சொல்லு,
சுகம் இழந்தான் என்று சொல்லு,
செல்வம் சேரவில்லை என்று சொல்லு,
வயோதிகம் வளர்கிறது என்று சொல்லு,—
ஆனால், —
ஜென்னி முத்தம் தந்தாள்
என்பதை மட்டும் மறந்திடாதே!

லே ஹண்ட்

என் காதலி ரோஜா மலரானுல்—

I

என் காதலி ரோஜா மலரானுல்,
நான் ஒரு பனித் துளி யானுல்,-
அந்தச் சிவந்த ரோஜா மலர்க்குள்,
அந்த மெல்லிய மலர்க்குள் விழுவேன்.
என் காதலி அழகி, என் காதலி அழகி,
நான் அவள் அழகைப் பருகுந்தோறும்
அவள் என்னைப் பார்த்து முறுவல் செய்வாள்.

II

என் காதலி கோதுமைக் கதிரானுல்,
நான் ஒரு சிறு பறவை யானுல்,-
அந்தக் கதிரைக் கடித்துக்கொண்டு
நான் அந்தரத்தில் பறந்துவிடுவேன்.
என் காதலி அழகி, என் காதலி அழகி,
நான் அவள் அழகைப் பருகுந்தோறும்
அவள் என்னைப் பார்த்து முறுவல் செய்வாள்.

III

என் காதலி பொன் நிறைந்த பொக்கிஷமானுல்,
நான் அதன் காவலனுனுல், -
என் இஷ்டம்போல் அதைத் திறப்பேன்,
இஷ்டம்போல் அதனுள் இருந்துகொள்வேன்
என் காதலி அழகி, என் காதலி அழகி,
நான் அவள் அழகைப் பருகுந்தோறும்
அவள் என்னைப் பார்த்து முறுவல் செய்வாள்.

வாழ்ந்துவிட்டேன்!

I

அளவிலா இனிமை எது? அதை
என் வாழ்வு அடையு முன்பே,
பூமி பிளவாமல் என்னைத் தாங்கி நிற்க!
பின்னர் வருவது வரட்டும்!
நான் பைத்தியமே கொண்டால் என்ன? -
வாழ வேண்டிய நாள் வாழ்ந்தவ ளாவேன்!

II

என்னைக் காதலிக்க ஒருவர் உளர்
என்று உறுதியாக நான் அறியுமுன்,
இனிய வானம் இருளா திருக்குமாக!
பின்னர் வருவது வரட்டும்!
அப்பொழுது துக்கம் தோய்ந்த வாழ்வில்
வாழவேண்டிய நாள் வாழ்ந்தவ ளாவேன்!

டெனிஸன்

காதலும் மணமும்

I

ஊர் அடங்கிவிட்டது,
என் கணவர் சுகமாய்த் தூங்குகிறார்.
ஆனால், என் துன்பமோ
என் கண்வழிப் பெருகும்.

II

என் அழகன் ஜேமி என்னைக் காதலித்தான்,
என்னை மணந்துகொள்ள விரும்பினான்,
ஆனால், அவன் கையிலோ காசில்லை,
மாலுமி வேலை பார்க்கச் சென்றான் -
எல்லாம் என் பொருட்டே!

III

அவன் போய் இரண்டு வார மாகவில்லை -
என் தந்தை கை முறிந்துவிட்டது,
எங்கள் பசுவைக் காணோம்,
என் தாயார் நோயாகி விட்டாள்!
அப்பொழுதுதான் ராபின் கிரே
என்னை மணம் பேசி வந்தார்.
ஆனால் என் ஜேமியோ - கப்பலிலே!

IV

என் தந்தைக்கு வேலை செய்ய முடியவில்லை,
என் தாய்க்கு நூற்க முடியவில்லை.

நான் இரவு பகலாய் உழைத்தேன்,
ஆயினும் அவர்களைப் போஷிக்க முடியவில்லை.
ராபின்தான் காப்பாற்றி வந்தார்,
கண்களில் நீர் பெருக நின்றார்.
'ஜென்னி! அவர்கள் பொருட்டு
என்னை மணந்துகொள்!' என்று
என்னை வேண்டிநின்றார்.

V

என் இதயம் இசையவில்லை,
என் ஜேமியையே எதிர்நோக்கி நின்றேன்.
ஆனால், ஐயோ பெரும் புயல்!
அவன் கப்பல் அமிழ்ந்துவிட்டது!

VI

என் தந்தை வற்புறுத்தினர்,
என் தாய் பேசவில்லை -
இதயம் ஒடியும்வரை நோக்கினாள்.
என்னை மணஞ் செய்து கொடுத்தனர்,
ராபின் கிரே என் கணவ ரானார்.
ஆனால், என் இதயமோ - கடலிலே!

VII

மனைவியாய் நாலு வாரம் ஆகவில்லை,
வாசற்படியில் வருத்தத்தோ டிருந்தேன்,
இதோ வருபவர் யார்? - என் ஜேமிதான்!
ஆனால், 'மணக்க வந்துவிட்டேன்!'
    என்று கூறும்வரை
அவனை நான் அறிந்துகொள்ள முடியவில்லை.

VIII

கண்ணீர் பெருக்கினேம் - பலபல பேசினேம்!
ஆனல் ஒரே ஒரு முத்தம்தான்!
ஆம் - 'போய்விடு' - என்று கூறினேன்!
ஐயோ, நான் இறந்துதொலேந்தே னில்லேயே!
ஆனல், நான் இறப்பவள் போல்
தோன்றுகிறேன?
ஐயோ, இந்தத் துன்பத்துக்கு ஏனே பிறந்தேன்?

IX

பிணம் போல் நடக்கிறேன்,
நூற்க மனமும் செல்லவில்லே,
ஜேமி - ஆம் என் ஜேமி!
அவனேப் பற்றி நினேக்கத் துணியேன்!
அது பாவமாகும் அல்லவா?
உண்மை மனேவியா யிருக்க முயல்வேன்,
ராபின் கிரே அன்பு செய்கிருர் அல்லவா?

லின்ட்ஸே சீமாட்டி

மாலுமியின் மனைவி

I

ஆம், அந்தச் செய்தி உண்மையென்று,
உங்களுக்கு நிச்சயமாகத் தெரியுமா?
அவர் சுகமா யிருக்கிறு ரென்று
உங்களுக்கு நிச்சயமாகத் தெரியுமா?
வேலையைப் பற்றி நினைக்க இதுவா நேரம்?
இராட்டினத்தைத் தூககித் தூர வையுங்கள் -
கோலின் என் கணவர் வந்துவிட்டார்!
நூல் நூற்க இதுவா நேரம்?
அங்கியைக் கொடுங்கள், கடற்கரை போவேன்,
அவர் கரையில் இறங்குவதைப் பார்ப்பேன்!
அவர் இல்லாத பொழுது
வீட்டில் அழகில்லை,
அதிர்ஷ்டமில்லை, ஆனந்தமு மில்லை!

II

என் சிறு தொப்பியைக் கொடு,
என் சரிகைக் கவுனைக் கொடு,
கோலின் வந்த சுப செய்தியைத்
தோழிகளுக்குச் சொல்ல வேண்டாமா?
ஆம், அந்தத் துருக்கிச் செருப்பும்
அந்த நீல மேல்ஜோடும் வேண்டியதே.
என்னை நாடி வருகிறுர்,
என்னை நேசிக்கிறுர் அல்லவா?
எல்லாம் அவருக்கு ஆனந்தம் அளிக்கவே!

III

எழுந்து இடத்தைச் சுத்தஞ் செய்யுங்கள்!
பெரிய பானையை அடுப்பில் வையுங்கள்!
நம் சிறு கேட்டுக்குப் பொத்தான் சட்டையும்,
ஜாக்குக்குப் பட்டுச் சொக்காயும் போடுங்கள்!
அவர்கள் செருப்புக் கறுப்புக் கனியட்டும்!
அவர்கள் மேல்ஜோடு பனிபோல் வெண்மை
வீசட்டும்!
அனைத்தும் அவருக்கு ஆனந்தம் அளிக்கவே!
அவர் வெகுநாள் கழித்து வருகிறார் அல்லவா?

IV

எவ்வளவு மெய்யான நெஞ்சு!
எவ்வளவு மிருதுவான பேச்சு!
அவர் மூச்சுக்கூடப் புதுக் காற்றுப் போலே.
அவர் படியேறி வரும்போது -
வெறும் பாதந்தானே - ஆனால்
எவ்வளவு இனிய இசை!
அவர் முகத்தைத் திரும்பவும் காண்பேனா?
அவர் பேசுவதை மீண்டும் கேட்பேனா?
அவரை வரவேற்கப் போகிறேன் -
அந்த நினைவில் என் தலை சுழல்கிறதே!

V

கோலின் ஆனந்தமாய் இருந்தால் போதும்,
எனக்கு வேறொன்றும் தேவையில்லை!

அவர் சுகமாய் இருந்தால் போதும்,
என்னைவிடப் பாக்கியசாலி இருக்கமாட்டாள்!
அவர் முகத்தைத் திரும்பவும் காண்பேனா?
அவர் பேச்சை மீண்டும் கேட்பேனா?
அவரை வரவேற்கப் போகிறேன் -
அந்த நினைவில் என் தலை சுழல்கிறதே!
அவர் இல்லாத பொழுது
வீட்டில் அழகில்லை,
அதிர்ஷ்டமில்லை, ஆனந்தமு மில்லை.

மிக்கிள்

பாகம் III

கவிஞனும் கவிகளும்

வசந்த ருதுவில் பட்சிகள் வரும்,
மாலையில் விண்ணிலே மீன்கள் மிளிரும்,
எங்கிருந்தோ - அறியோம் - அதுபோல் -
மேகத்திலிருந்து மழை - பூமியினின்று ஓடை,
அமைதியிடையே திடீரென்று ஒரு சப்தம்,
எவ்விதம் - அறியோம் - அதுபோல் -
திராட்சைக் கொடிக்குத் திராட்சை,
மரத்திற்குக் கனி,
தேவதாருவுக்குத் தென்றல்,
கடலில் பெருக்கம், சுருக்கம்,
எப்படி - அறியோம் - அதுபோல் -
கப்பல் கரை சேரும்,
இதழில் நகை தவழும்,
அலைகள் நுரை கக்கும்,
எவ்விதம் - அறியோம் - அதுபோல் -
அறிவு கடந்த அகன்ற வெளி,
அதன் பனிபடர்ந்த பாகம்,
அங்கிருந்தே கவிஞனிடம்
விரைகின்றன கவிகள்.
அவன் பாடும் பாடல்கள்
அவனுடையன என்போம்,
அவனுடையன அல்ல என்போம்;
அவன் பெறும் புகழ்
அவனுடையது என்போம்,
அவனுடையது அல்ல என்போம்.
இரவு பகலாய் எண்ணங்கள் தொடர்கின்றன.
செவி சாய்ப்பான். தேவி எழுதென்றால்
பணிவதே அவன் கடன்.

லாங்பெலோ

பாடகர்கள்

I

சங்கட கீதங்கள் சந்தோஷ கீதங்கள் பாடி
மக்கள் இதயத்தை இளக்கி
அமரர் நாடு அழைத்துவர [பினுன்.
ஆண்டவன் தன் பாடகர்களைப் பூமிக்கு அனுப்

II

அனல் வீசும் ஆன்மாவுடைய அந்த இளைஞன்
தன் கையில் தங்க யாழ் தாங்கி,
கனவு லோக இன்னிசை எழுப்புகிருன்,
சோலையூடும் சுனையருகும் திரிகிருன்.

III

மீசை அரும்பிய முகத்தராகிய இவரோ,
சந்தையின் நடுவே நின்று,
ஆழ்ந்த உரத்த குரலில்,
தன்னைச் சூழ்ந்து நிற்கும் ஜனங்களின்
இதயங்களைக் கலக்கிக்கொண்டிருக்கிருர்.

IV

உயர்ந்த இருண்ட கோவில்களில்
வயோதிகர் ஒருவர் பாடி நிற்கிருர்;
அவர் கையிலுள்ள கம்பீரமான
குழலின் கனக வாய்களிலிருந்து
இரக்கம் எழுந்து காற்றில் கலக்கும்.

V

இந்த மூன்று பாடகர்களேயும் கேட்ட மக்கள்
இவர்களில் யார் பெரியர் என்று வாதமிட்டனர்-
அவர்கள் இசை ஒவ்வோர் இதயத்திலும்
முரணுன எதிரொலி எழுப்புவதாய்த் தோன்றின.

VI

'அளவில் உயர்வு தாழ்வுண்டு,
ஆனல் இனத்தில் அவை உண்டோ?
ஒவ்வொருவர்க்கும் வெவ்வேறு சக்தி
அளித்தேன்.
ஒருவர் மனத்தை மகிழ்விக்கிருர்,
ஒருவர் தைரியம் ஊட்டுகிருர்,
ஒருவர் நல்வழி காட்டுகிருர்.
'இதய யாழில் இவை மூன்றும்
சக்தி வாய்ந்த தந்திகள்.
மூன்றின் நாதமும் கேட்கப் பழகினோர்
முரண்பாடு ஒன்றும் அறியார்,
பரிபூரண ஒற்றுமை தெளிவார்' -
என்று இறைவன் இயம்பினன்.

லாங்பெலோ

கவியும் காலமும்

எல்லாம் விழுங்கும் காலமே!
சிம்மத்தின் நகத்தை மழுக்கிவிடு,
பூமி பிளந்து விளைவை விழுங்கட்டும்,
உறுமும் புலியின் பல்லைப் பிடுங்கிவிடு,
பீனிக்ஸ்*பறவையைப் பூண்டோடு மாய்த்துவிடு.
பருவங்கள் களிக்கட்டும், மாறி அழியட்டும்,
உலகுக்கும், அதன் அழியும் இன்பங்கட்கும்
உன் சித்தம்போல் செய், சம்மதமே!
ஆனல், காலமே! கொடுமையினுங் கொடுமை -
அது மட்டும் செய்யாதே! - சொன்னேன்!
என் காதலன் நெற்றியில் கோடு கிழியாதே!
அவன் அழகை அழித்துவிடாதே!
அவன் அழகுக்கோர் அழகாய் நிற்கட்டும்!
காலமே! - வேண்டாம், உன் சித்தம்போல்
எதை வேணுமானலும் செய்!
என்ன தீங்கு நீ இழைத்தாலும்,
என் காதற் செல்வன், என் கவிகளில்
என்றும் இளமையோடு இலங்குவான்!

ஷேக்ஸ்பீயர்

* இப்பறவை எரியில் விழுந்து மடிந்த பிறகு, சாம்பலிலிருந்து இளமையோடு எழும் என்று சொல்லுவர்.

எட்டாத லட்சியம்

I

வீட்டிலும் சரி, வெளியிலும் சரி - என் காதலி
எந்த நேரமும் என் அருகிலே.
அவள் மின்னும் பாதம் தெரிகிறது,
அவள் ஆடையின் கீதம் கேட்கிறது.

II

அவள் அடியெடுத்து வைப்பதே அழகு;
அவள் குழலை விரைந்து முடிந்துளாள்,
பின்னல் தோளிலே புரளும்,
இடைக்குக் கீழே சரிந்து தொங்கும்.

III

மைதானத்தில் என் முன் ஓடுவாள்;
எல்லோரும் சென்று தேய்ந்த வழியில்
என்னையும் இழுத்துச் செல்கிருள்;
ஆனல் திரும்பி மட்டும் பார்ப்பதில்லை.

IV

ஆயினும் அவள் குரல் கனவில் கலந்து
நாளுக்கு நாள் என்னை அதிகமாய் மயக்கும்.
அந்தக் காதல் - குரல்! - ஐயோ!
அது முன்னிலும் தூரத்தில் போய்விட்டதே!

V

அடைவோம் என்ற நம்பிக்கை
அதிகமாய் இருந்த பொழுது
கவலையின்றிப் பின் தொடர்ந்தேன்.
இளமை யிருந்ததால் ஏமாந்து போனேன்.
ஆயினும் தொடரவே செய்கிறேன்,
ஆனல், நான் அவள் முகத்தை
என்றேனும் காணப் பெறுவனே?

பிரடரிக் லாக்கர்

நண்பர் கூடும் கரை

I

தூக்கத்தின் கடலுக்கு அப்பால்
தொலையில் ஒரு கரையில்
பிரிந்த நண்பர் மீண்டும் கூடுவதாக
ஒரு பழைய நம்பிக்கை உண்டு.

II

பொய்யோ மெய்யோ,
அதை நான் கைவிடேன்!
அந்த நம்பிக்கையை இழவேன்!
அங்ஙனம் விழிப்பதற் கின்றேல்
ஊழிகால உறக்கமா யொழியட்டும்!

மலையின் மேல்

இந்தப் பாதை இறுதிவரை
மலையைச் சுற்றிச் சுற்றித் தானா? -
ஆம், இறுதிவரை அவ்விதம்தான்.

II

இந்தப் பிரயாணத்துக்கு
இன்று முழுவதும் செல்லுமா? -
ஆம், காலைமுதல் இரவுவரை ஆகும்.

III

இரவு ஓய்வுகொள்ள இடம் உண்டா? -
ஆம், நீண்ட இரவில் தங்கவீடு உண்டு.

IV

அந்த வீட்டை இருள் மறைத்துவிடாதா? -
இல்லை, நீ அதைக் காணாதிருக்க முடியாது.

V

இரவில் வேறு வழிப்போக்கரைச் சந்திப்பேனா?
ஆம், உனக்கு முன் போனவர்களை.

VI

வீட்டைக் கண்டதும் கதவைத் தட்டவா?
அல்லது இரைந்து கூப்பிடவா? -
வேண்டாம், உன்னைக் காக்க வைக்கமாட்டார்.

VII

நடந்த சோர்வு நீங்க வசதி உண்டா? -
ஆம், இனி உனக்குச் சிரமம் இல்லை.

VIII

எனக்கும், தேடுவார் எல்லோர்க்கும்
சயனிக்க மெத்தை உண்டா?
ஆம், வருவோர் அனைவர்க்கும் உண்டு.

ராஸெட்டி

ரோஜாவும் முள்ளும்

இன்பங்கள் இதயம்விட்டு ஏகுவதேன் ?
கவலைகள் நெஞ்சைக் கவ்வுவதேன் ?
நான் அறியேன். இயற்கை கூறும்.
மனிதன் அதற்குப் பணிவான்.
ரோஜா மடிந்திட, முட்கள் வாழ்வதேன் ?
அதைக் காண்பேன், ஆனால் அறியேன் !

லாண்டார்

புகழ்

'புகழ்' மங்கை, அடிபணிந்து காதல் இரப்பார்க்கு
முகம் கோணுவாள்.
அலட்சியமா யிருக்கும் இளைஞனிடம் அவளாகவே
தன்னை ஒப்புவிப்பாள்.
அவளை எண்ணாதவரிடம் அணுகி அவளாகக்
காதல் வேண்டி நிற்பாள்.
அவளின்றித் திருப்தியுற அறியாதாரிடம்
அவள் பேசமாட்டாள்.
தன்னைப் பற்றிப் பேசுவோர் தன்னை நிந்திப்பதாக
எண்ணுவாள்.
அவளிடம் காதல்நோய் கொண்ட கவிஞர்காள்!
அவள் எள்ளினால் நீங்களும் எள்ளிவிடுங்கள்!
அவளிடம் காதல் - பித்துக்கொண்ட கலைஞர்காள்!
அவளிடம் தலைவணங்கி விடைபெற்றுக்
கொள்ளுங்கள்!
அவள் இஷ்டப்பட்டால், அவள் தானாக
உங்களைப் பின்தொடர்வாள்!

கீட்ஸ்

வாடிய ரோஜா

I

ஓ வாடிய ரோஜா மலரே!
உன் பெயரைக் கூற யார் துணிவார்?
உன் ரோஸ் நிறம் எங்கே? மென்மை எங்கே?
உன் இனிமை எங்கே?
வெளுத்து விட்டாய்!
கோதுமை அரிதாள்போல் உலர்ந்துவிட்
மேஜையில் வைத்து ஏழு வருஷங்கள் [டாய்!
ஆய்விட்டனவே!
உன் பெருமைகளே உனக்கு நாணம் தரும்!

II

வேலியின் முட்களுக்கு இடையில்
உன்னை அணைந்து
நாள் முழுதும் நிற்கும் நறுமணத்தைக்
கவர்ந்து செல்லும் தென்றல் -
இன்று இனிமை யில்லை என்று ஏகிவிடும்.

III

ஒளி மலர்ந்ததா, மலர் ஒளிர்ந்ததா
என்று மயங்குமாறு உன் அழகிய உடலில்
தன் அழகைச் சேர்க்கும் கதிரவன் -
இன்று உனக்கு ஒளி தராது செல்வான்.

IV

செம்மை விளங்கும் உன் மேனியில் தங்கி
வெண்மையாய் இருந்தும் செந்நிறம் பெற்ற
உன்னை நனைத்திடும் பனித் துளி -
இன்று விழுந்தால் - உன்னைத் தொடவே
இருண்டு போகும்

V

வேனில் பொருது உன் தூய இதழில்
தன் மென்கால் நீட்டி அமரும் ஈ
இன்று அமர்ந்தால் - வெறுத்து உன்னை
விட்டு அகலும்.

VI

உயிரற்றது என்று மயங்குமாறு
உன் தேன் மாந்திய மகிழ்வால்
உன் மேனியில் அயரும் தேனீ -
இன்று வந்தால் - கண்ணெடுத்துப் பாராது.

VII

இதயமோ, - அது தன்னந் தனியாக
உன்னை மறவாமல் இருக்கும்.
உன்னை மறைக்கும் உன் மாறுதலை அறியினும்,
இதயம் இன்னும் உன் நறுமணம் நுகரும்,
உன் அழகைக் காணும்,
நீயே பூரணம் என்று துணியும்.

பிரௌணிங் தேவி

சுதந்திரம்

I

வாழ்வு மாறலாம், ஆனால் மறைய முடியாது ;
நம்பிக்கை மங்கலாம், ஆனால் மரிக்க முடியாது ;
உண்மை ஒளியலாம், ஆனால் ஜொலிக்கவே செய்யும் ;
அன்பு மறுக்கலாம், ஆனால் வரவே செய்யும் !

II

சுதந்திரம், வாழ்வுக்கு ஒளி தராவிடின்,
நம்பிக்கைக்கு ஆனந்தம் நல்காவிடின்,
உண்மைக்கு ஞானம் உதவாவிடின்,
அன்புக்கு ஆற்றல் அளிக்காவிடின்,

III

நம்பிக்கை போய் ஏக்கம் பெருகி
வாழ்வு கல்லறையாக மாறிவிடும் ;
உண்மை புனிதமான பொய் யாகிவிடும் ;
காதல் காமம் ஆகிவிடும் !

ஷெல்லி

என் தோணி கரையிலே

I

என் தோணி கரையிலே,
என் கப்பல் கடலிலே!
போகுமுன், என் நண்பா!
உனக்கு இருமுறை வாழ்த்து!

II

என்னை நேசிப்பார்க்குப் பெருமூச்சு;
என்னை வெறுப்பார்க்குப் புன்முறுவல்;
என்ன வந்தாலும் சரியே,
எதையும் தாங்க இந்த இதயம் உண்டு!

III

என்னைச் சுற்றிக் கடல் குமுறினும்
என்னைத் தாங்கியே செல்லும்;
பாலைவனம் என்னைச் சூழ்ந்தாலும்
அங்கேயும் தண் சுனைகள் உண்டு!

IV

கேணியில் கடைசித் துளியானாலும்,
கரையில் தாகத்தால் வாடினும்,
என் அறிவு மயங்கு முன்
உன்னை நினைந்தே குடிப்பேன்!

V

தேவனுக்குரிய திராட்ச ரஸம் போல்
இந்த நீர்த் துளியும் ஈவேன்,
நண்பா! நன்மை உண்டாவதாக!
எனது, உனது இன்பம் காண்பதாக!

பைரன் பிரபு

மண்ணும் விண்ணும்

I

தேவலோகத்தில் சண்டையில்லை, சச்சரவில்லை ;
கலப்பற்ற உண்மையைக் காணலாம்,
கருதியபடி காரியம் சாதிக்கலாம் :
ஆனால், இந்த மனித வாழ்வே இனிமை!
இதுவே இனிமை, இதுவே இனிமை!
இந்த உலகக் காற்றே எனக்கு இன்பம்!
விண்ணும் வேண்டாம், விண்மீன்களும் வேண்டாம்,
எனக்குத் தெரிந்ததெல்லாம்
இந்த அன்பு நிறைந்த வையமே!

II

'இந்த உலகில் எல்லாம் நிழலே ;
அந்த உலகில்தான் உண்மை!' என்கிறீர்.
ஆனால், அந்தச் சூனியத்தைக் கண்டு அஞ்சுகிறேன்!
அஞ்சி, குழந்தையைப் போல் அன்பில் ஒளிகிறேன்!
தேவர்கள் அன்பு செய்வதென்ன, காட்டுவீர்!
கேவலம் நான் ஒரு பலமற்ற மானுடன் ;
அதனால், அதை நீர் காட்டும் வரையிலும்,
மனிதரே என் துணை, அவரைவிட்டு அகலேன்!

III

'காதல் மாறும், காதல்மொழிகள் தடுமாறும்,
அற்ப ஆசைகளை அகற்றி எறிக!
மனம் விண்ணை நாடட்டும்!
அங்கே ஆண் பெண் இல்லை, தேவதைகளே உண்டு.

சோர்வில்லாக் குரல் - மொழியில்லா இசை!' என்
ஆனுல், என் இதயமோ - என் அன்பன், [கிறீர்.
இறந்துபோன நண்பனின் இன்குரலை
ஞாபகத்திற் கொண்டு திருப்தியுறும்.

IV

'இப்பொழுதுள்ளவை அழிந்து போம்;
அழியாதவை பெற இவற்றை இழப்பாய்;
இந்த உலகில் எதற்காக வாழ்கிறோம் -
அந்த அழகுப் பொருள்கள் அழியும்!' என்கிறீர்.
அழகுப் பொருள்கள் அநித்தியமே யாயினும் -
ஆனுல், ஐயோ, அதனுல்தானே,
இறந்துபடும் என்பதற்காகத்தானே,
அவற்றை இறுகப் பிடித்துளேன்!

கோரி

நமக்கு அழகான இடம் வேறில்லை

[ஸ்வீடன் தேசத்தைப் பற்றி]

நமக்கு அழகான இடம் வேறில்லை,
இங்கு நமக்குக் குறையொன்று மில்லை.

விதி நமக்கு எது தரினும் சரி,
நமக்குச் சொந்தமாக உளது இது !
அன்பு செய்ய - ஐச்வரியமாய் மதிக்க -
உலகில் இதைவிட உயர்ந்தது எது ?
நீர்நிலைகள் நிறைந்த நாடு !
பாட்டும் மெய்யும் நிரம்பிய நாடு !
வாழ்வின் அலைகட்கு அஞ்சா நாடு !
எங்கள் தந்தையர் நாடே!
எங்கள் தனையர் நாடே !
வறுமைக்கு நாணற்க !
ஆனந்த சுதந்திரமாய் வாழ்க !

ஜான் லட்விக் ரூனிபெக்

அதிர்ஷ்டம் எப்பொழுது ?

I

ஒருவனுக்கு அவன் சவாரி செய்ய
        ஒரு குதிரை கொடு ;
ஒருவனுக்கு அவன் கடலில் போக
        ஒரு படகு கொடு ;
கரையிலும் சரி, கடலிலும் சரி.
பதவியும், பணமும், சுகமும், ஆற்றலும்
        அவனுக்குக் குறைவு படா.

II

ஒருவனுக்கு அவன் புகை குடிக்க
        ஒரு குழாய் கொடு ;
ஒருவனுக்கு அவன் படிக்க
        ஒரு நூல் கொடு -
வீட்டில் ஒன்றும் இல்லாவிடினும்
சாந்தமான சந்தோஷத்தால்
அவன் வீடு ஒளிநிறைந் திருக்கும்.

III

ஒருவனுக்கு அவன் காதல் செய்ய
        ஒரு யுவதி கொடு -
என் காதலியை நான் காதலிப்பது போல்
        அவனும் காதல் செய்ய.
அதிர்ஷ்டம் அவன் நாடியில் ஓடும்,
வீட்டிலும் சரி, வெளியிலும் சரி.

ஜேம்ஸ் தாம்ஸன்

தனி மலர்

I

இந்த ஒரு மலரே உண்டு,
இது ஒன்றே மணம் வீசும்,
இதன் அழகிய தோழர் எல்லாம்
வாடி மறைந்து போனர்.
இப்பொழுது பந்து ஒருவரும் இல்லை.
இது சேர்ந்து களிக்கவோ,
இது சிந்தை தேறவோ,
வேறு மலரில்லை, ஒரு முகையுமில்லை.

II

மலரே! நீ மட்டும் செடியில்
ஏங்கி நிற்க வேண்டியதில்லை!
தோழர் எல்லாம் தூங்குவதால்
நீயும் அவரோடு தூங்குவாய்!
உன் தோழர் இறந்து போனர்,
மணம் இழந்து உறங்குகின்றூர்,
நீயும் அவரோடு நித்திரை செய்,
தரையில் இலைகளைப் பரப்புவேன்!

III

நட்பு மலர்கள் உதிர்ந்து போனல்,
காதல் மணிகள் விழுந்து போனல்,
உன்போல் நானும் ஏகுவேன்,
அதுவே சரியான காரியம்.
உண்மை இதயங்கள் வாடிவிட்டால்,
அன்பு இதயங்கள் பறந்துவிட்டால்,
ஐயோ! இந்தப் பாலை - உலகில்
வாழ விழைபவர் யாரே? மூர்

இரு நண்பர்கள்

உயிரே! நீ யார், உன் தன்மை யென்ன, அறியேன்.
ஆனால் நீயும் நானும் ஒருகால் பிரியவேண்டும்
என்பதை அறிவேன்!
நாம் இருவரும் சந்தித்தோமே,
அது எப்பொழுது, எப்படி, எங்கே?
அதுவும் இன்றுவரை எனக்கு மர்மம்தான்.
உயிரே! வெகுநாள் ஒன்றாய் இருந்துவிட்டோம்,
வசந்த காலத்தும் சரி, வாடைக்காலத்தும் சரி.
நண்பர்களிடை அன்பு இருந்துவிட்டால்
அவர்கள் பிரிவது கடினம், ஐயமில்லை!
கண்ணீர் பெருகும், நெஞ்சு பொருமும்.
என்னிடம் சொல்லாமல் எனக்குத்
தெரியாமல் போய்விடு -
எந்த நேரமாயினும் சரி, உன் இஷ்டம்!
'போய்வருகிறேன்!' என்று விடைபெற வேண்டாம்;
இதனிலும் ஒளிமிகுந்த உலகில் என்னைச்
'சுகமா?' என்று விசாரித்தால் போதும்.

பார்பால்ட்

என் தாய்நாடு

I

என் தாய்நாடே! உன்அன்பின் பொருட்டுத்
தவிட்டை உண்பேன்,
கந்தையை அணிவேன்,
இசை, இன்பம் எல்லாம் எறிந்து விடுவேன்!

II

என்றேனும் ஒருநாள் என் ஆன்மா
இந்த அழியும் இல்லத்தை விட்டு
ஏகவேண்டியதே.
ஆனால் உன்னைவிட்டு என்னைப் பிரிக்க
எமனுக்கும் ஆற்றல் உண்டோ?
இல்லை என்று நீ அறிவாய்.

III

உன்னிடம் பிறப்பது -
எவ்வளவு அரிய பாக்கியம்!
அதை யார் என்னிடமிருந்து
பறித்துவிட இயலும்?
அவ்வளவு துணிவுள்ள திருடன் உளனோ?
காலத்தால் இயலுமா, மரணத்தால் இயலுமா?
ஒன்றாலும் இயலாது.

IV

என் தாய்நாடே! உன்பொருட்டு
என் உடலை ஈவேன்!
என் உயிரை அளிப்பேன்!
மெய்மறந்து நிற்கும் என் அன்பு கண்டு
சிலர் நகைப்பர், சிலர் வருந்துவர்.

ஆனால் நான் அவர்களை லட்சியம்
செய்யப் போவதில்லை.
நான் உன் மகன் - அப்படியே நடப்பேன்!
ஆண்டவன் அருள் செய்வான்.

V

எங்கள் செல்வம், எங்கள் புகழ்,
எங்கள் அன்பு - இவற்றை
நீ விரும்புகிறாயில்லை ;
எங்களையே நீ உன் உயிர்க்குயிராய்
மதித்திருக்கின்றாய்.

VI

ஊழியத்தில் நான் இன்னல் அடைவதை,
நான் உயிர் துறப்பதை நீ காண்பாய்.
உயிரை உனக்குப் பலியிடுவதால்
ஊழூழி காலம் ஊழியம் செய்வேன்!

நாராயண வாமன திலகர்

இன்னும் ஒரு துரதிர்ஷ்டசாலி

I

இன்னுமோர் அதிர்ஷ்டங் கெட்டவள் -
வாழ்வில் சோர்வுற்று,
முன்பின் யோசிக்க முடியாமல்,
மரணத்தைத் தேடிவிட்டாள் !

II

அவளை மெதுவாய் எடுங்கள் !
அவளைக் கவனமாய்த் தூக்குங்கள் !
அவ்வளவு மெல்லிய சரீரம் !
அவ்வளவு இளமை ! அவ்வளவு அழகு !

III

அவள் ஆடையைப் பாருங்கள் !
உடம்போடு ஒட்டிவிட்டது !
ஜலமோ சொட்டிக் கொண்டிருக்கிறது !
அவளை உடனே தூக்குங்கள் !
அருவருக்க வேண்டாம், அன்பாய் எடுங்கள் !

IV

இகழ்ச்சியாய்த் தொடாதீர் !
துக்கத்தோடு—இளகிய மனத்தோடு நினையுங்கள் !
அவள் தோஷங்களைப் பற்றி யல்ல -
இப்பொழுது மீதியாயுள்ள தெல்லாம்
அவள் மாசற்ற வெண்மையே யாகும் !

V

காரியத்தை அவசரப்பட்டுத்தான் –
கடமையைக் கருதாமல்தான் செய்துவிட்டாள்!
ஆயினும் ஆழ்ந்து ஆராய வேண்டாம்!
இனி எந்த இழிவும் அவளைத் தீண்டாது!
அந்தகன் அழகா யுள்ளதை மட்டும்
அவளிடம் விட்டு வைத்துள்ளான்.

VI

எத்தனை தவறுகள் இழைத்திருப்பினும் -
அவளும் பெண்குலம் தானே?
ஐயோ! ஒட்டிக்கொண்ட
அந்த உதடுகளைத் துடையுங்கள்!

VII

அவிழ்ந்துவிட்ட அவள் குழலை முடியுங்கள்,
அந்த அழகு நிறைந்த அளகபாரத்தை.
அவள் வீடு எதுவோ என்று
'ஆச்சரியமே' மூக்கில் விரல் வைத்து நிற்கும்!

VIII

அவள் தந்தை யார்?
அவள் தாய் யார்?
அவளுக்குச் சகோதரி உண்டா?
அவளுக்குச் சகோதரன் உண்டா?
அல்லது அனைவரிலும் அன்பான
அதிக நெருங்கிய ஒருவர் உண்டா?

IX

அந்தோ! அவனியில் அபூர்வமோ
இயேசு இயம்பிய இரக்கச் சித்தம்?
ஐயோ! எவ்வளவு பரிதாபம்!
ஊர் நிறைய வீடுகள்,
ஆயினும் அவளுக்கு இடம் இல்லையே!

X

சகோதர வாஞ்சை - தாய் தந்தை வாஞ்சை,
அந்த உணர்ச்சி மாறிவிட்டதே!
அன்பு - கொடிய சான்று கண்டு
அதன் பீடத்தினின்று வீழ்ந்துவிட்டதே!
கடவுளின் கருணைகூடக் கல்லாய்விட்டதே!

XI

நதியின் இருமருங்கு வீடுகளின்
விளக்கு வெளிச்சம் வெகு தூரம்வரை
ஜன்னல் வழியே ஜலத்தில் சலிப்ப,
அவள், ஐயோ, அந்த இருளில் -
வீடின்றி, வாசலின்றி -
தனியாக ஆச்சரியத்தோடு நின்றாள்.

XII

மார்ச் மாதத்துக் காற்று -
கடுங் குளிர் உடம்பைத் துளைக்கும்.
அன்றிரவு அந்தக் காற்று
அவளை நடுக்கிவிட்டது.

ஆனால் அந்தோ, அவள் நின்ற பாலமோ -
அதன்கீழ் ஓடும் ஆற்று நீரோ -
அவள் அணுவளவும் அஞ்சவில்லை.
வாழ்வில் அவள் அனுபவம்
மனத்தைக் குழப்பிவிட்டது, மூளையைக் கலக்கி
மரணத்துக்குப் பின் மர்மம் - [விட்டது!
அதை அறிய ஆவல், ஆனந்தம் -
இந்த உலகுக்கு வெளியே
இந்த உடலை எங்காயினுஞ் சரி
எறிந்துவிட்டால் போதும்.

XIII

அதோ குதித்துவிட்டாள்! அமிழ்ந்துவிட்டாள்!
ஆற்று நீர் குளிரால் நடுக்கிவிடுமே?
அலைகள் அலங்கோலப் படுத்திவிடுமே!
ஆனால் அதைச் சிந்திப்பது ஏது?
அறநெறி வழுவிய ஆண் உலகமே!
அந்தக் காட்சியைச் சித்திரித்துப் பார்!
உன்னால் முடியுமானால்,
நீயும் அதில் குளிப்பாய், நீயும் அதைக் குடிப்பாய்!

XIV

அவளை மெதுவாய் எடுங்கள்!
அவளைக் கவனமாய்த் தூக்குங்கள்!
அவ்வளவு மெல்லிய சரீரம்!
அவ்வளவு இளமை! அவ்வளவு அழகு!

XV

அங்கங்கள் விறைத்துப் போகுமுன்,
கணுக்கள் இறுகிப் போகுமுன்,
அன்பாய், கண்ணியமாய்,
அவற்றை ஒழுங்குசெய்யுங்கள்!
அவள் கண்கள் - அவைகளை மூடிவிடுங்கள்!
இமையாமல் வெறித்துப் பார்க்கும் -
ஆனால் அந்தோ, ஒன்றும் காணவே!

XVI

ஆற்றுமண் படிந்த அந்தக் கண்கள் -
அந்தப் பயங்கரமான வெறித்த பார்வை -
ஏக்கங் கலந்த அந்த இறுதிப் பார்வை -
இனி உளது யாது என்று
அறிய விரும்பும் அசையா நாட்டமோ?

XVII

மன வேதனையால் மாண்டாள்.
இகழ்ச்சியால் துரத்தப்பட்டாள்.
இரக்கமற்ற மனிதத் தன்மை -
எரித்துவிடும் பைத்தியம் -
ஓய்வு தேடச் செய்தன.
மௌனமாய்ப் பிரார்த்திப்பது போல்
அவள் கைகளை வினயத்தோடு
அவள் நெஞ்சில் சேர்த்துவையுங்கள்!

XVIII

அவள் தன் குறையைக் கூறி,
தன் பாவங்களைத் தாழ்மையாய்த்
தன் ரட்சகரிடம் சமர்ப்பிக்கட்டும்.

ஹூட்

பாகம் IV

ஷர்ட்டின் பாடல்

I

அவளுக்கு மானங்காக்கப் போதிய கந்தையில்லை;
ஊசி நூல் கொண்டு தைத்துத் தைத்து
விரல்கள் சோர்ந்து தேய்ந்துவிட்டன ;
கண்கள் சிவந்துவிட்டன, திறக்க முடியாது.
ஆயினும், தையல் - தையல் - தையல்!
வயிற்றுப் பட்டினி - மாசேறிய மேனி !
ஷர்ட்டின் பாடலைச் சோகக் குரலில் பாடுகிருள்.

II

சேவல் கூவிவிட்டது, ஆயினும் என்ன ?
வேலை - வேலை - வேலை !
வானில் மீன்கள் வருமளவும்
வேலை - வேலை - வேலை !
பெண்ணுக்கு ஆன்மா இல்லையோ ?
இதுதான் கிறிஸ்தவர் செயலோ ?
இதனினும் அடிமை வாழ்வு
ஏற்றமுடைத் தன்றே ?

III

தலை சுழலும் - ஆயினும் என்ன ?
வேலை - வேலை - வேலை!
கண்கள் மயங்கும் - ஆயினும் என்ன ?
வேலை - வேலை - வேலை !
கைகள் - கழுத்து - காசா - தையல்!
காசா - கழுத்து - கைகள் - தையல்!

பொத்தான் தைக்கிறேன் - தூங்கி விழுகிறேன்,
கனவிற் போலவே பொத்தான் தைக்கிறேன் !

IV

சகோதரிகளோடு பிறந்தவர்களே !
தாய்மா ருடையவர்களே !
மனைவிமாரை மணந்தவர்களே !
நீங்கள் அணிந்துபோவது ஷர்ட்டல்ல -
மனிதர் வாழ்வேயாம் ! - ஆயினும் என்ன ?
தையல் - தையல் - தையல் !
வயிற்றில் பசி - மேனியில் தூசி,
இரட்டை நூல் கொண்டு தைப்பதென்ன ?
சவத் துணியா ? - ஷர்ட்டா ?

V

மரணமா - அந்தப் பயங்கர எலும்புருவா ?
அதைப் பற்றி என்ன பேச்சு? - அதைப் பற்றி
என்ன பயம் ?
பட்டினி கிடந்து, பட்டினி கிடந்து,
எனது உருவம் எலும்புக் கூடுதான்.
ஐயோ, கடவுளே ! ஏன் உணவு
இவ்வளவு கிராக்கி ?
ஏன் மனிதத் தசையும் இரத்தமும்
இவ்வளவு மலிவு ?

VI

வேலை - வேலை - வேலை ;
என் வேலைக்கு ஓய்வுமில்லை ஒழிவுமில்லை !

ஆனால், என் வேலைக்குக் கூலி என்ன ?
வைக்கோற் பாய் - ரொட்டிப் பொறுக்கு
கந்தை உடை, ஒடிந்த குறிச்சி,
ஒழுக்குக் கூரை - ஒன்றும் விரியாத் தரை,
வெறுஞ் சுவர் - சித்திரமும் கிடையாது !
சிற்சில சமயம் சுவரில் என் நிழல் விழும் !
அதுதான் சித்திரம் ! - அதுதான் ஆறுதல் !

VII

வேலை - வேலை - வேலை !
நிமிஷந்தோறும் வேலை ! - ஆயினும் என்ன ?
வேலைதான் - ஓயாத வேலைதான் !
சிறைப் பட்டார் போல் நான்
செய்த குற்றம் யாது ?
கைகள் - கழுத்து - காசா - தையல்,
காசா - கழுத்து - கைகள் - தையல் !
ஆம், அகம் நொந்து அயரும்வரை தையல் !
கையும் மூளையும் விறைக்கும் வரை தையல் !

VIII

மார்கழி மாதம் மங்கிய ஒளியில்
வேலை- வேலை - வேலை !
பனி யொழிந்து பரிதி வந்தும்
வேலை - வேலை - வேலை !
சூரியன் ஒளியில் தூக்கணங்கள் வந்து,
'வசந்த ருது, வாராயோ வெளியில் ?'
என்று என்னை ஏளனம் செய்கின்றன.

IX

தலையின் மேல் நீல வான் - பாதத் தடியில்
பசும்புல்,
மலர்களில் நறுமணம் - மறுபடியும்
துய்ப்பேனோ ?
வறுமையின் துயர்களை அறியும் முன்னால் -
உணவுக்கன்றி, உள்ளம் மகிழக்
குறுநடை கொண்ட சிறு பிராயத்தில் -
அப்பொழுது பெற்ற உள்ளக் கிளர்ச்சி
இப்பொழுது எனக்கு இறையேனும்
ஏற்படுமோ ?

X

ஐயோ, ஒருமணி நேரம் -
அதிலும் குறைந்தேனும்,
சிறுபோ தேனும் வேலையின்றி
இருக்கப் பெறுவேனோ ?
காதல் செய்யவு மன்று, கனவு காணவு மன்று -
மனம் விண்டு வாய்திறந்து அரற்றவே !
கொஞ்சமேனும் அழுதால்
நெஞ்சம் ஆறுத லடையும்.
ஆனால், கண்ணீர் பெருக்கலாமோ ?
ஒவ்வொரு துளியும் ஊசி ஓட்டத்தைத்
தடைசெய் திடாதோ ?

XI

அவளுக்கு மானங்காக்கப் போதிய கந்தையில்லை;
ஊசிநூல் கொண்டு தைத்துத் தைத்து

விரல்கள் சோர்ந்து தேய்ந்துவிட்டன.
கண்கள் சிவந்துவிட்டன - திறக்க முடியவில்லை.
ஆயினும், தையல் - தையல் - தையல்!
வயிற்றுப் பட்டினி - மாசேறிய மேனி,
ஷர்ட்டின் பாடலைச் சோகக் குரலில் பாடுகிருள்,
ஆனல் அக்குரல் ஐச்வர்யவான்களை எட்டுமோ?

ஹூட்

குழந்தைகளின் அழுகுரல்

I

ஆண்டுகள் வளர்ந்த பின்பே துக்கம் வரும்,
ஆயினும் குழந்தைகள் அழுகின்றனரே!
அன்னையர் மேல் தலைகளைச் சாய்த்துளர்,
ஆயினும் கண்ணீர் பொங்குகின்றதே!
ஆட்டுக் குட்டிகள் பசும்புல் மேய்கின்றன,
குருவிக் குஞ்சுகள் கூட்டில் கொஞ்சுகின்றன,
மான் குட்டிகள் நிழலோடு ஆடுகின்றன,
நாள் - மலர்கள் நறுமணம் வீசுகின்றன,
ஆனால், ஐயோ! இளங் குழந்தைகள்
மனங் கசந்து அழுகின்றனரே!
சுதந்திரம் வாழும் இந்த நாட்டிலே,
பிறர் விளையாட, இவர் அழுகின்றனரே!

II

'துக்கமேன்? துயரமேன்? அழுகையேன்?'
என்று குழந்தைகளைக் கேட்கின்றீர்களோ?
ஆம், வயோதிகன் வருவதை அஞ்சி அழலாம்;
ஆம், வயதான மரம் இலையின்றி நிற்கலாம்;
ஆம், ஆண்டு முதிர்ந்து பனியில் முடியலாம்;
ஆம், புண் பழுத்துப் புரை யோடலாம்;
ஆம், பழகிய நம்பிக்கை இழந்து வாடலாம்;
ஆனால், ஐயோ! இளங் குழந்தைகள்
சந்தோஷம் நிறைந்த நமது தாய்நாட்டில்
தாயர் மார்பில் சாய்ந்து விழுந்து

கண்கள் சிவக்க அழுகின்றனரே!
காரணம் என்ன என்று கேட்பீரோ?

III

வெளுத்த முகங்கள், ஒட்டிய கன்னங்கள்,
துன்பம் நிறைந்த கண்கள்!
பெரியவர்க்குப் பெருகும் துக்கம்
குழந்தைகள் கன்னங்களைக் குழிக்குமோ?
'எங்கள் இளம் பாதங்கள் எவ்வளவு பலவீனம்!
காலைத் தூக்கவில்லை, அதற்குள் களைப்பு -
கல்லறையின் ஓய்வும் கண்ணுக்குத்
தெரியவில்லையே!
அழுவதேன் என்று குழந்தைகளைக்
கேட்காதீர்;
வயோதிகரைக் கேளுங்கள்! வெளியே குளிர்,
ஆனால் ஐயோ! கல்லறைகள்
வயோதிகர்க்கே!

IV

'அகால மரணம் அடையலாம், உண்மையே.
கழிந்த ஆண்டில் தங்கை மாண்டாள்;
அவள் சவக்குழியைப் பார்த்தோம்;
அதில் அவள் வேலை செய்ய வேண்டாம்;
அங்கே ஒரே தூக்கமாய்த் தூங்கலாம்;
விடிந்துவிட்டது என்று எழுப்புவா ரில்லை;
பகல் காயட்டும், பனி விழட்டும்,
கல்லறையில் காதுவைத்துக் கேளுங்கள்!

சிறு தங்கை ஒருபொழுதும் அழுவதில்லை ;
அவள் முகத்தை நாம் பார்த்தால்
அதை நாம் அறியமாட்டோம், நிச்சயம்.
முன்னில்லாத முறுவல் முளைத்துவிட்டதே !
கோவில் மணி தாலாட்டக் குதூகலமே!
கல்லறையில் கணப்பொழுதும் கவலையில்லை
அகால மரணம் அடையப் பெற்ருல்
அது எங்களுக்கு எப்பொழுதும் நல்லதே.

V

‘நாங்கள் களைத்துவிட்டதே காரணம்,
ஓட முடியாது, சாட முடியாது,
என்றேனும் நாங்கள் புல் தரை விரும்பினுல்
அதில் விழுந்து உறங்கவே.
குனிந்து குனிந்து முழங்கால் நடுங்கும்,
நடக்க முயன்ருல் குப்புற விழுவோம்.
தூக்கமின்றிச் சோர்ந்துபோன கண்கள் -
சிவந்த மலரும் வெளுத்துத் தோன்றும்.
பூமிக்கடியில், நிலக்கரிக் கனியில்,
நாள்முழுதும் சுமந்து சுமந்து அலுத்தோம்,
ஆலைகளில் இரும்புச் சக்கரங்களை
நாள் முழுதும் சுற்றிச் சுற்றி அலுத்தோம்

V1

‘நாள் முழுதும் சக்கரங்கள் சுற்றிக்கொண்டே
யிருக்கும்.
நாள் முழுதும் சத்தம் - ஒரே இரைச்சல்.

சுழலும்பொழுது காற்று முகத்தில் வீசும் ;
இதயம் பதறும் - நாடி துடிக்கும்,
தலை சுழலும், அதனுல் சுவரும் சுழலும்,
கைக்கெட்டாத ஜன்னலில் காணும் வானமும்
சுழலும்,
சுவரில் விழும் நீண்ட ஒளியும் சுழலும்,
எல்லாம் சுழலும், நாங்களும் சுழல்வோம் !
நாள் முழுதும் ஒரே சுழற்சி, ஒரே இரைச்சல் !
சில சமயம் எங்களை அறியாமலே,
"சக்கரங்களே ! இன்றேனும் நில்லுங்களேன் !"
என்று நாங்கள் வேண்டுவோம்.'

VII

'அனைவர்க்கும் ஆசீர்வாதம் அருளும் ஆண்டவன்
உங்களுக்கும் மறுமையில் அருள்வான்,
மயங்காதீர்'
என்று, சகோதரரே ! குழந்தைகளுக்கு
உரைப்பீரோ ?
அவர்கள் கூறுவதைக் கேட்பீர் -
'இரும்புச் சக்கரங்களின் இரைச்சலில்
எங்கள் விண்ணப்பம் இறைவன் செவியில்
ஏறுமோ ?
நாங்கள் அழுது புலம்புவோம், ஆனுல்
பக்கத்தில் போவோர் செவியில்
படுவதில்லையே !
பட்டாலும் அவர் ஒரு மொழிகூடப்
பகர்வதில்லையே !

சக்கரங்களின் சத்தத்தில் நாங்கள் கூடப்
பிறர் பேச்சைக் கேட்க முடிவதில்லையே!
இறைவன் பக்கம் தேவர்கள் பாடிநிற்பரே!
எங்கள் அழுகுரல் அவன் செவியில் சேருமோ?

VIII

'ஆனால் ஐயோ! அதுவன்று விஷயம்.
அவன் கல்லைப் போல் வாய்திறவானே -
எங்களுக்கு வேலையிடும் எங்கள் எஜமானன்
இறைவன் அம்சம் என்று இயம்புகின்றீரே,
இதென்ன பேச்சு, இதை யார் நம்புவார்?
மேலே பார்த்தால் மேகங்கள் தாமே
இருண்டு சக்கரம்போல் சுழலும்-வேறுண்டோ?
எங்களை ஏனோ ஏளனம் செய்கிறீர்?
நாங்கள் துக்கத்தால் நம்பிக்கை இழந்தோம்
இறைவன் எங்கே? கண்ணீர் மறைக்கின்றதே!'
சகோதரரே! உங்கள் கூற்றை எல்லாம்
குழந்தைகள் அழுது பொய்யாக்குவதைக்
கேட்பீர்!
மனிதர் அன்பே கடவுள் உண்மையைக்
காட்டும் -
ஆனால், இரண்டையும் குழந்தைகள்
நம்புவதில்லையே!

IX

வெளுத்த முகங்கள், ஒட்டிய கன்னங்கள் -
பயங்கரம் நிறைந்த கண்கள் -

தேவ கணங்கள் நினைவு வருகின்றன அல்லவோ!
குழந்தைகள் கூறுவதைக் கேட்பீர் :
'கொடுமை நிறைந்த நாடே! குழந்தைகளின் நெஞ்சில்
உலகத்தை ஏற்றி வைக்கிருயே!
இதயத்தின் துடிப்பை மிதித்து அடக்குகிருயே!
சந்தை மூலம் சாம்ராஜ்யம் ஆளுகின்ருயே!
கொடுங் கோலர்களே! உங்கள் வழி எல்லாம் எங்கள் இரத்தம்!
ஆனுல் ஆற்றல் மிகுந்தார் சீற்றத்திலும்
குழந்தைகள் சாபம் கொடியதே, அறிவீர்!'

பிரௌணிங் தேவி

*நீங்கள் பலர் - அவர்களோ சிலர் !

I

அடர்ந்த நிசப்த அரணியத்தைப் போல்,
அமைதியாய் உறுதியாய் நில்லுங்கள்
கைகளைக் கட்டிக் கொள்ளுங்கள், [டும்.
கண்கள் தோல்வியறியாக் கணைகளா யிருக்கட்

II

கொடுங்கோலர் துணிந்தால்
குதிரைகளை ஓட்டி வரட்டும் !
குத்தட்டும், வெட்டட்டும், அறையட்டும்,
அரியட்டும் ;
இஷ்டம்போல்செய்ய இடங்கொடுத்துவிடுங்கள்!

III

கோபம் தணியுமட்டும் கொல்லட்டும் !
மடக்கிய கைகளோடும், மருளாத கண்களோடும்
அச்சமும் ஆச்சரியமும் அகற்றி
அவைகளைப் பார்த்துக் கொண்டிருங்கள் !

IV

வெட்கத்தோடு திரும்பி விடுவர்,
சிந்திய ரத்தமே முகத்தில் நாணம் காட்டும்.

குறைக்க முடியாத தொகையினராய்,
விழித்தெழும் சிங்கம் போல் வீறுகொண்டு
எழுங்கள் !
தூக்கத்தில் படிந்த பனியைச் சிதறுவது போல்
பிணித்துள விலங்கினைப் பெயர்த் தெறியுங்கள் !
நீங்கள் பலர், அவர்களோ சிலர் !

ஷெல்லி

* இந்தப் பாடல் காந்தியடிகளுக்கு மிகவும் பிடித்தவைகளில் ஒன்று.

ஆங்கிலர்க்கு ஒரு கீதம்

I

ஆங்கில மக்காள்! உங்களைத் தாழ்த்தும்
தனவந்தர்க்கு
நீங்கள் உழுவது ஏன்?
உங்களைத் துன்புறுத்துவோர்க்கு உயர்ந்த
உடைகள்
கஷ்டத்தோடும் கவலையோடும் நெய்வது
ஏன்?

II

அந்த நன்றியற்ற ஆண் தேனீக்கள் உங்கள்
வேர்வையை
வடிக்கும், உங்கள் குருதியைக் குடிக்கும்.
ஆயினும் அவைகட்குத் தொட்டில் முதல்
சுடுகாடுவரை
உணவும் உடையும் தந்து காப்பது ஏன்?

III

ஆங்கிலத் தேனீக்களே! நீங்கள் மெய்வருந்திச்
சிருஷ்டிப்பவைகளை உங்களிடமிருந்து
பறிப்பதற்காக
அந்த ஆண் தேனீக்களுக்கு நீங்கள் ஆயுதங்கள்
விலங்குகள்
ஆக்கித் தருவது ஏன்?

IV

உங்களுக்கு உணவு, ஓய்வு, ஒதுங்க இடம்
உண்டா?
உங்களுக்குச் சுகம், சமாதானம் உண்டா?
உங்களுக்குக் கஷ்டங்களை மாற்றும் காதல்
அஞ்சன முண்டா?
அரும்பாடும் அச்சமும் அளித்து
நீங்கள் வாங்கும் பொருள்தான் யாது?

V

நீங்கள் விதைக்கிறீர்கள் - அயலான்
அறுக்கிறான்!
நீங்கள் நெய்கிறீர்கள் - அயலான் அணிகிறான்!
நீங்கள் ஆக்குகிறீர்கள் - அயலான்
அனுபவிக்கிறான்!
நீங்கள் ஆயுதம் அமைக்க - அவன் அதை
உங்கள் மீதே உபயோகிக்கிறான்!

VI

விதையுங்கள்-ஆனால் கொடுங்கோலனை அறுக்க
விடாதீர்கள்;
ஆக்குங்கள் - ஆனால் அயலானை ஆள
விடாதீர்கள்!
ஆயுதம் செய்யுங்கள் - ஆனால் நீங்களே
உபயோகியுங்கள்!

VII

குகையிலும் குடிசையிலும் ஒதுங்குகிறீர்கள்!
நீங்கள் அலங்கரித்த மாளிகையில் அயலான்
வசிக்கிறான்!

நீங்கள் செய்த விலங்கை நீங்களே அணிவதேன்?
நீங்கள் வடித்த வேல் உங்களையே நோக்கி
வருவதேன் ?

VIII

ஆம், உங்கள் மண்வெட்டி கொண்டு
உங்கள் சவக் குழியையும் அமைத்துக்
கொள்க ;
ஆம் உங்கள் தறியைக் கொண்டு
உங்கள் சவமூடு துணியும் நெய்து கொள்க;
ஆங்கில நாடு உங்களுக்கு இடுகாடு வழங்கும்,
கவலை வேண்டாம் !

ஷெல்லி

எழுந்திடுக!

I

முதலாளி - தொழிலாளியின் இரத்தம் கொண்டு
இரத்தினம் உண்டாக்குகிருன்.
நிலச்சுவான்-விவசாயியின் வாழ்நாளைப்
பாழாக்குகிருன்.
அரசன் - வறிஞரை நுகத்தில் மாட்டுகிருன்.
அட்டூழியத்தில் ஆழ்ந்த ஜனங்களோ - தூங்கு
கின்றனர்.

II

ஆசாரியர் மேடைமீது நிற்கிருர், அவர்
மகன் பாடசாலையில் படிக்கிருன்.
ஒருவர் வயோதிகக் காலத்தில் முட்டாள்,
மற்றவனோ? இளமையில் கிழவன்!
பொய் உண்மையை நாடுகிறது,
வௌவால் சூரியனைக் கேலி செய்கிறது.
இந்த வேடிக்கையைப் பாருங்கள்!

III

தற்கால உலகின் கிண்ணத்தில்
நான் பார்ப்பதென்ன? - விஷம்.
ஆம், அதில் பாம்புகள்
சுருண்டு கிடக்கின்றன!

IV

சிம்மத்தின் இரத்தம் சில சமயம்
பலவீனர் தேகத்திலும் ஓடுவதுண்டு
நீர்த் துளியிலும்
நெருப்பின் உணர்ச்சி தோன்றுவதுண்டு!
எழுந்திடுக!

இக்பால்

இறந்தோர் நகை

சாவு என்று பயப்படுத்துகிறீர்களா ?
அதைக் கேட்டுச் சிரிப்பதா, வியப்பதா ?
சாவா ? நாங்கள் ஒருபொழுதும் ஜீவித்த
தில்லையே !

II

விலங்கும் சிறையும் என்று பயப்படுத்துகிறீர்
களா ?
அதைக் கேட்க விநோதமா யிருக்கிறதே !
எங்கள் நரம்பு ஒவ்வொன்றும் விலங்குதானே !
எங்கள் உடல் முழுவதும் துன்பம் நிறைந்த
சிறைதானே !

III

எங்களைச் சுட்டு வீழ்த்துவீர்களோ ?
சுட்டால் உயிரைக் காணமாட்டீர்களே !
உறங்கிக் கிடக்கும் சாவையல்லவோ எழுப்பு
வீர்கள் !
நீங்கள் விரும்புவது போல அச்சத்தை எழுப்ப
முடியாதே !

IV

மூடர்களே ! உங்கள் அக்கிரமம் கண்டு சிரிக்
கிறோம் !
இனிமேல் எங்களிடம் உங்கள் எண்ணம்
பலிக்காது !

V

எங்கள் நகையின் பலம் அறிவீர்களா?
உங்கள் ராஜ்யங்கள் உறுதியற்றவை என்று
உணர்த்தும்
'இறந்தோர் நகை' - வாழ்வோர் மத்தியில்
எழுந்து
அற்புதங்கள் ஆக்கும் ஆற்றலாகும், அறிவீர்!

VI

ஜாக்கிரதை! இறந்தோர் நகை என்று எண்
ணற்க!
இறுமாப்புக் கொண்ட ராஜ்யங்களை
எமனுலகு அனுப்ப இயலும்!
என்ன சொல்லுகிறீர்? இஷ்டம் என்ன?

ஹரீந்திரநாத சட்டோபாத்யாயர்

பாகம் V

கலைஞன்

‘இமைப் பொழுதே நிற்கும் இன்பம்’ - என்பதற்கு ஒரு சிலை செய்யும் ஆசை ஒருநாள் மாலை அந்தக் கலைஞன் உள்ளத்தில் எழுந்தது. அவனுக்கு வெண்கலத்தாலேயே சிலை அமைக்கத் தெரியும். அதனால் தான் விரும்பிய சிலை வார்க்க வேண்டிய வெண்கலத்தைத் தேடி உலகெங்கும் அலைந்தான்.

ஆனால், உலக முழுவதிலுமுள்ள வெண் கலம் எல்லாம் எங்கோ மறைந்து போய்விட்டது. ‘என்றும் அழியாத துக்கம்’ என்று ஒரு சிலை. அந்தச் சிலையின் வெண்கலம் தவிர உலகில் வேறு வெண்கலம் கிடையாது.

அந்தச் சிலையோ அவனுடையதே. அவன் வாழ்வில் எந்த ஒன்றைக் காதலித்தானோ அதன் கல்லறையின் மேல் அவனே அதைச் செய்து வைத்திருந்தான். அது இறவாத காதலின் அறி குறி – அழியாத துக்கத்தின் அடையாளம். உல கத்திலோ, இந்த வெண்கலம் தவிர வேறு வெண்கலம் இல்லை.

அந்த விக்கிரகத்தை எடுத்தான், உலையில் இட்டான், ‘அழியாத துக்க’த்தின் வெண்கலத் தைக் கொண்டு ‘இமைப்பொழுதே நிற்கும் இன் ப’த்தின் உருவத்தை அமைத்தான்.

ஆஸ்கார் ஒயிலட்

தேவ நீதி மன்றம்

தேவ நீதி மன்றம். மனிதன் கடவுள் சன்னிதானம் வந்த பொழுது நிசப்தம். கடவுள் மனிதனுடைய ஜீவிய ஏட்டைத் திறந்தார்

'உன் வாழ்வு தீமை நிறைந்ததாகும். உதவி வேண்டியவர்க்குத் துக்கம் தந்தாய். ஏழைகள் இரந்த பொழுது செவிசாய்க்கவில்லை. அனுதைகள் ஐச்வரியத்தை அபகரித்தாய். நல்லோர் உணவைப் பறித்து நாய்களுக்கு இட்டாய்!' என்று கடவுள் கூறினர்.

'ஆம், அவ்விதமே நடந்தேன்' என்று மனிதன் மறுமொழி கூறினன்.

மறுபடியும் கடவுள் மனிதனுடைய ஜீவிய ஏட்டைத் திறந்தார்.

'உன் வாழ்வு தீமை நிறைந்ததாகும். அழகைக் காட்டினேன், அதையே நாடினய். அறத்தை மறைத்து வைத்தேன், அதை அலட்சியம் செய்தாய். பாபங்களுக்கு வழிபாடு செய்தாய். தீய வழி நிற்பதில் வெட்கமடையவில்லை!' என்று கடவுள் கூறினர்.

'ஆம், அவ்விதமே நடந்தேன்' என்று மனிதன் மறுமொழி கூறினன்.

மறுபடியும் கடவுள் மனிதனுடைய ஜீவிய ஏட்டைத் திறந்தார்.

'உன் வாழ்வு தீமை நிறைந்ததாகும். நன்மை செய்தோர்க்குத் தீமை செய்தாய். உணவு தந்த கைக்கு ஊறு செய்தாய். உனக்கு அமுதளித்த தனங்களை உதாசினம் செய்தாய். காதல்கொண்டு வந்தவர்க்குக் காமம் அளித்தாய்!' என்று கடவுள் கூறினர்.

'ஆம், அவ்விதமே நடந்தேன்' என்று மனிதன் கூறினன்.

கடவுள் மனிதனுடைய ஜீவிய ஏட்டை மூடிவிட்டு,

'சரி, உன்னை நரகத்துக்கு அனுப்புவேன்!' என்று கூறினர்

'உம்மால் இயலாது!' என்று மனிதன் கூறினன்.

'ஏன் இயலாது? உன்னை ஏன் நான் நரகத்துக்கு அனுப்ப இயலாது?' என்று கடவுள் கேட்டார்.

'ஏன? அங்குதானே நான் எப்பொழுதும் வசித்து வருகிறேன்!' என்று மனிதன் கூறினன்.

தேவ நீதி மன்றத்தில் நிசப்தம். சிறிது நேரத்துக்குப் பின்னர் -

'நரகத்துக்கு அனுப்ப முடியாதென்றால் உன்னைச் சுவர்க்கத்துக்கு அனுப்புவேன், அது நிச்சயம்!' என்று கடவுள் கூறினர்.

‘உம்மால் இயலாது!’ என்று மனிதன் கூறினான்.

‘ஏன் இயலாது? உன்னை ஏன் நான் சுவர்க்கத்துக்கு அனுப்ப முடியாது?’ என்று கடவுள் கேட்டார்.

‘ஏனா? எந்தக் காலத்திலும் எந்த இடத்திலும் சுவர்க்கம் என்றால் என்ன என்று என்னால் எண்ண முடிந்ததில்லையே!’ என்று மனிதன் கூறினான்.

தேவ நீதி மன்றத்தில் நிசப்தம்

ஆஸ்கர் ஒயில்ட்

‘ நன்மை செய்தால் - ’

இரவு நேரம் - தன்னந் தனியாக இருந்தார். அதோ பெரிய நகரத்தின் வாயில், அதை நோக்கி நடந்தார்.

அருகே வந்ததும் அங்கே நடைபெறும் ஆனந்தக் கூத்தையும், சந்தோஷச் சிரிப்பையும், வாத்தியங்களின் இன்னிசையையும் கேட்டார். கதவைத் தட்டினர். காவலர் திறந்தனர்.

சலவைக் கல் மாளிகை, தூண் தோறும் தோரணம், எங்கும் தீவர்த்தியின் ஜோதி. மாளிகைக்குள் நுழைந்தார்.

கண் கவரும் பல மண்டபங்கள் கடந்து விருந்து மண்டபம் வந்து சேர்ந்தார். ரோஜாக்கள் விரித்த வெல்வெட் மெத்தையில் சாய்ந்திருந்த ஒருவனைக் கண்டார். அவன் வாய் மதுவால் சிவந்திருந்தது.

அவன் பின் சென்று, மெதுவாகத் தோளில் கை வைத்து, ‘அப்பா, ஏன் இவ்விதம் வாழ்கிறாய் ?’ என்று கேட்டார்.

அந்த இளைஞன் திரும்பினான், யார் என்று கண்டுகொண்டான். ‘நான் குஷ்டரோகியாயிருந்தேன். தாங்கள் குணப்படுத்தினீர்கள். நான் வேறு எவ்விதம் வாழவேண்டுமோ ?’ என்று கூறினான்.

மாளிகையை விட்டு வெளியே வீதிக்கு வந்தார். ஆடை ஆபரண அலங்கிருதை ஒருத்தியைக் கண்டார். வேடன் போல இளைஞன் ஒருவன் அவள் பின்னுல் வந்தான். அவன் கண்களில் காமத் தீ எரிவதைக் கண்டார்.

விரைந்து சென்று அவன் கையைப் பிடித்து, 'அப்பா, இந்தப் பெண்ணை ஏன் பார்க்கிருய்? அதுவும் இந்த விதமாக?' என்று வினவினுர்.

இளைஞன் திரும்பினுன், யார் என்று கண்டு கொண்டான். 'நான் குருடனு யிருந்தேன், தாங்கள் கண்கள் தந்தீர்கள். வேறு எதை நான் பார்க்கவேணுமோ?' என்று கூறினுன்.

அந்த மங்கையை அணுகி, 'அம்மா, உனக்கு இவ்வழி தவிர வேறு வழி யில்லையோ?' என்று வினவினுர்.

அவள் திரும்பினுள், யார் என்று கண்டு கொண்டாள். 'என் பாவங்களை மன்னித்தீர், இதுதானே இன்ப வழி?' என்று கூறி நகைத்தாள்.

ஊருக்கு வெளியே சென்றுர். சாலை ஓரம் உட்கார்ந்து அழும் ஓர் இளைஞனைக் கண்டார். அவனிடம் சென்று, அவன் தலையில் கை வைத்து, 'அப்பா, நீ ஏன் அழுகிருய்?' என்று கேட்டார்.

இளைஞன் தலையைத் தூக்கினுன், யார் என்று கண்டுகொண்டான். 'நான் இறந்து போனேன், தாங்கள் எழுப்பினீர்கள். நான் அழாமல் வேறு என்ன செய்வது?' என்று கேட்டான்.

ஆஸ்கார் ஒயில்ட்

உனக்கு அது போதும்!

அடியில் கண்டவாறு எனக்கு அசரீரி உபதேசம் உரைக்கக் கேட்டேன்:

உன்னிடம் அழகுமில்லை, சாதுரியப் பேச்சு மில்லை, அதனுல் நீ அரண்மனை வாயிலில் காத்திருப்பது வீண்.

உனக்கு உள்ளே போக அனுமதி கிடைக்கப் போவதில்லை. ஆம், உனக்கு ஏது அனுமதி?

ஆனுல் இங்கே வெளியே தரிசு நிலம் ஒன்றுண்டு: அதில் நீ ஒரு சிறு குடிசை கட்டிக் கொள்ளலாம், நிலமும் குடிசையும் உனக்கே சொந்தமாயிருக்கும்.

பாதைக்கு அருகில் இருக்கிறது, வேலியும் கிடையாது.

அதனுல், வழி நடந்து களைப்புற்ற பிரயாணிகள் பலர், வெயில் கொடுமையால் தாகங் கொண்டு, விடாய் தீர்க்க ஜலம் விரும்பி உன்னிடம் வருவர்.

உனக்கு அது போதும்

எட்வர்டு கார்ப்பென்டர்

காதல்

காதலே! - உன்னைச் சிறப்பித்துக் கவிஞர் செய்யுள் செய்வர்.

உனக்கு ஆயர்கள் ஆனந்தமாய்க் குழல் ஊதுவர்; உனக்காகக் கன்னியர் தம் தனி மாடங்களில் பெருமூச்செறிவர்.

தலைமுறை தலைமுறையாய்ப் பாடகர்கள் உன்னைப் பாடிக்கொண்டே இருப்பர்.

உலக முழுவதும் உன் புகழ் ஒலிக்கும், நானும் சில உரைப்பேன்.

நீ அழகாயிருக்கிறாய் என்பதற்காக அன்று;

உன் கண்கள் வெற்றியொளி வீசுவதற்காக அன்று, உன் பார்வையின் சூழ்ச்சிக்காகவும் அன்று;

உன் குரல் காற்றில் கலந்த கானமுதம் போல இருப்பதற்காக அன்று; உன் விஜயம் கீழ்த் திசையில் காணும் அருணோதயம் போல இருப்பதற்காகவும் அன்று;

நீ பாட்டோடும் நடனத்தோடும் வருகிறாய் என்பதற்காக அன்று, உன் பாதங்கள் வசந்த மாருதம் போல் மின்னுவதற்காகவும் அன்று;

உன்னிடம் உதிக்கும் நறுமணத்திற்காகவும் அன்று;

உன் வாசஸ்தலம் வீரர்கள் பெருமாட்டிகள் நடுவே என்பதற்காக அன்று;

சலவைக் கல் முற்றத்தில் செய்-சுனைகளின் இசை கேட்டு நிற்கிருய் என்பதற்காக அன்று ;

சாந்த எண்ணங்களும் தவறில்லாத பேச்சுக் களும் உன் தோழமையா யிருப்பதற்காக அன்று ;

விசாலமான மாளிகைகளில் மலர்களிலும் மதுக் கலசங்களிலும் நீ தங்கியுள்ளாய் என்பதற் காக அன்று ;

மரணத்தைக் கண்டு நீ அஞ்சுகிருய் என் பதற்காகவும் அன்று, நீ சிறு குழந்தையா யிருக் கிருய் என்பதற்காகவும் அன்று.—

ஆனுல், நீ பூமியினின்று எழுந்து, அரக்கன் போல் வானுற வளர்ந்து எனக்குப் பயங்கர மாய்த் தோன்றுவதால் ;

நீ பூமியில் இருளையும் மின்னலையும் நிறைத்து என்னிடம் வரும் பொழுது நான் காற் றில் மிதக்கும் இலை போலும், மலரில் எழும் மணம் போலும், காட்டுத் தீயில் அகப்பட்ட பறவை போலும் உள்ளேன் ஆதலால் ;

நீயே அரசாள்கின்றுய், உன் முன் எல்லாம் தோல்வியுறுகின்றன, உன் பயங்கரமான புதிய உத்தரவைக் கேட்டு - உன் புதிய மொழியாகிய 'ஜனநாயக'த்தைக் கேட்டு - ஜீவர்கள் அனை வரும் சந்தோஷம் அடைகின்றனர் ஆதலால் ;

நீ என்னைத் தழுவி நிற்பதால் நான் மரணத்தை ஏளனஞ் செய்கிறேன் - ஏன், சந்தோஷமாய் அதைச் சந்திக்கக்கூடச் செல்கிறேன் ஆதலால்;

ஆம், நீ என்னிடமிருந்து உன் ஆற்றலைத் தவிர ஏனைய ஆற்றலை எல்லாம் கவர்ந்துவிடுகிறாய் ஆதலால்;

என்னுடைய சந்தேகம், எதிர்ப்பு எல்லாவற்றையும் ஒழித்துவிட்டாய் ஆதலால்;

இதுவரை யாராலும் ஏற்றுக்கொள்ளப்படாமல் இகழப்பட்டவைகளிலிருந்து, காதலே! ஜனநாயகமே! நீ எதையும் தகித்து அழிக்கும் தழலாய் எழுந்துள்ளாய் ஆதலால்.

ஆகையால், காதலே! என்னைத் தகித்து அமரர் உலகேற்றும் இன்தழலாய்! ஆக்குபவளே! அழிப்பவளே! உன்னை நான் புகழ்வேன்!

எட்வர்டு கார்ப்பேன்டர்

சமத்துவ தர்மம்

சமத்துவச் சட்டத்தை வெகு காலத்திற்கு மீற உன்னால் இயலாது.

இப்பொழுது நீ பிறரிடமிருந்து பெறும் அந்த அளவுக்கு நீ இறுதியில் வறியவனாவாய்.

இப்பொழுது நீ எதை அளிக்கின்றாயோ அதுவே உன்னிடம் திரும்பி நிச்சயமாய் வந்து சேரும்.

பிறரைவிட உயர்ந்தவனாய் நீ எண்ணுவா யானால் அந்த நிமிஷத்திலேயே நீ உன் தாழ் மையை விளம்பரம் செய்தவனாய் விடுகின்றாய்.

அனைவர்க்கும் ஊழியனாய் - உதவி செய்பவ னாய் - இருக்க விரும்புபவன் அவ்விதம் நடந்து கொள்வதன் மூலமாகவே அவர்களுடைய எஜ மானனாய் விடுகிறான்.

*　　*　　*

உன் சொந்த வாழ்வைத் தேடாதே - ஏனெ னில் அதுவே மரணம்.

ஆனால், உன் வாழ்வை உவந்தளிக்கும் மார்க் கம் எதுவென்று தேடு - அப்படிச் செய்தால் எப் பொழுதும் அதிகாலையில் உனக்குப் புதிய உயிர் பிறக்கும்.

*　　*　　*

குழந்தை நடக்கக் கற்பதுபோல், இயற்கை முறையில் ஆடம்பரமின்றி, மனிதன் இறக்கக் கற்கவேண்டும்.

சமத்துவ வாழ்வைச் சாவு விழுங்கிவிட முடியாது. வெள்ளத்தை விரலால் தடுக்க இயலாது. தடைகளை எல்லாம் மீறி அது ஓடவே செய்யும்.

இகலோக இன்பங்களில் நாட்டமா? புகழ் தேடுவதில் கவனமா?

ஆனால், 'இயற்கையை வெல்ல முடியாது. எவ்வளவு முயன்றாலும் - எத்தனை இரவுகள் விழித்திருந்தாலும் - ஜலம் மலையின் அடியினின்று மேல் நோக்கி ஓடமாட்டாது. உன் உரிமைகளைப் போலவே பிறர் உரிமைகளும். உன் திறமையில் உன் சிறப்புப் போலவே, அவர் திறமையில் அவருடைய சிறப்பும். உன் உயிர் உனக்கு நெருங்கிய சம்பந்த முடையது போலவே அவர் உயிரும் உனக்கு நெருங்கிய சம்பந்தமுடையதே' என்பதைச் சிறிது பொழுதிலேயே அறிந்துகொள்வாய்.

அதனால் உன்னைப் பிணித்து நிற்கும் விலங்குகளை விலக்கு - கவலையாம் களைப்புத் தரும் கனச் சுமையை அகற்று - நீ அணியும் கவசம் நீ எண்ணுவது போல் உனக்குப் பாதுகாப்பு அளியாது - உன்னைப் பகைவன் அம்புக்குக் குறியாக்கியே விடும்.

உங்கள் ஒற்றுமையை உணர்வாயாக. ஆகா, அப்பொழுது உண்டாகும் ஆனந்தம் என்னே! - சமத்துவ சாகரத்தில் நீந்துவாய் - அழியா வாழ்வு அடைவாய்.

எட்வர்டு கார்ப்பெண்டர்

நீ யார்?

நெறி பிறழ்ந்தவரைக் காப்பாற்றப் புறப் படும் நீ யார்?

உன்னை நீ காப்பாற்றிக் கொண்டாயா?

தன் உயிரைக் காப்பாற்ற விரும்புபவன் அதை இழக்கவேணும் என்பதை நீ அறியாயோ?

நீயும் நெறி தப்பியவர்களில் ஒருவனு?

இவர்களில் ஒவ்வொருவரும், நீ அவர்களுக் குக் கற்றுக்கொடுக்கும் அளவு - ஒருவேளை அதிக மாய்க்கூட - உனக்குக் கற்றுக் கொடுக்க முடியும் என்பதை நிச்சயமாய் அறிந்துகொள்.

ஆகையால், நீ அவர்கள் பாதத்தடியில் அடக் கத்தோடு உட்கார்ந்து, முதலில் அவர்கள் பேசக் காத்துக்கொண்டிருந்தாயா? உன்னுல் அறிய இயலாத இந்தக் குழந்தைகள் முன் பணிவுடன் நின்ருயா?

உனக்கும் அவர்களுக்கும் இடையில் உள்ள ஆழங் காண முடியாத குழியில், தற்பெருமை, மயக்கம், அறிவுப் பொருமல், வெறுப்பு, அருவருப்பு ஆகியவற்றை எறிந்துவிட்டாயா?

உங்கள் இருவர்க்கும் இடையில் உள்ள காற்றைப் போல, உங்கள் இருவர்க்கும் உள்ள சம்பந்தம் சமத்வமுடையதுதானு? சுதந்திரமுடையது தானு?

எல்லோராலும் இகழப்படும் இவர்களில் ஒருவரிடமிருந்து நன்மை பெறுவதில் நீ ஆனந்தம் காண்பாயா ?

நெறி தப்பியவர்களில் நீயும் ஒருவனாக இருக்க உன்னால் முடியுமா ?

அப்படியானால் எழுந்திரு ; இரட்சகனாயிரு !

எட்வர்டு கார்ப்பென்டர்

மாடல் அச்சுக்கூடம், சென்னை